விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 புரட்டாதி 19 முஹற 9 இதழ் 233
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 5-10-84

## 'தமிழ்ப் பகுதியில் ஆயுதப்படை ஆக்கிரமிப்பைத் தடுக்க நேரடி அஹிம்சை நடவடிக்கை'

### சென்னையில் அமிர்தலிங்கம் அறிவிப்பு

(சென்னை)

இலங்கையில் தமிழர்வாழும் பகுதிகளான வடக்குக் கிழக்கில் ஆயுதப்படையினரின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையைத் தடுத்து நிறுத்துவதற்கு நேரடி அஹிம்சை நடவடிக்கையை ஆரம்பிக்கப் பல்வேறு தமிழ் பிரிவுகளுக்கும், அரசியல்கட்சிகளுக்குமிடையில் உடன்பாட்டினைஏற்படுத்த எல்லாமுயற்சிகளும் ஓரிருவாரத்தில் மேற்கொள்ளப்படுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுச் சென்னையில் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்னை குறித்து நிருபர்களோடு அவர் உரையாடினர்.

அவர்மேலும் கூறியதாவது: ''கடந்த ஞாயிற்றுக்கிழமை வவனியா்வி லுள்ள அரிசி

(5ம் பக்கம் பார்க்க)

## ராணுவ முகாமைத் தாக்குவதற்குத் திட்டம்!

(கொழும்பு))

பணயக் கைதிகளாக ஐநூறு குழந்தைகளைஈவிரக்கமற்றமுறையில் சிறையில் அடைத்து வைத்திருப்பதாகச் சர்வதேச செய்தி ஸ்தாபனங்களும், வெகுஜன சாதனங்களும் எமக்கு எதிராகக் குற்றஞ் சாட்டுவதில் எவ்வித உண்மையுமில்லை. ஆதாரமற்ற செய்திகள் இவை. ஆயினும் 495 பேரை பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள், அல்லது திட்டங்கள் பற்றி அறிந்து வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டது ஏதோ உண்மைதான். இவர்களின் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு காலியிலுள்ள 'பூஸா,' என்ற இடத்தில் வைத்திருந்தோம். இவர்கள் மிகவும் வசதியாக கவனிக்கப்பட்டார்கள். இப்போது எல்லாரும் விடுதலையாகி 60 பேர் மட்டுமே அங்கு இருக்கின்றனர்.''

இவ்வாறு தேசிய பஸ்தோபஸ்த்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நேற்றுக் கூறினர்.

[8ம் பக்கம் பார்க்க)

# பருத்தித்துறையில் பதற்றம்!

(புலோலி)

பருத்தித்துறையில் நேற்று முன் தினம் இரவு நடந்த குண்டு வீச்சுச் சம்பவத்தில், பருத்தித்துறை நீதவான் வாசஸ்தலம் சேதப்படுத்தப்பட்டது. சுங்கப்பகுதிக்குச் சொந்தமான கட்டங்களும் சேதத்துக்குள்ளாகின.

நேற்று பருத்தித்துறை சுங்கத்திணைக்களத்திற்கு அண்மையில் இளைஞரொருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி ஸ்தலத்திலேயே மரணமானுர்.

பருத்தித்துறை தபால் நிலையத்தில் கடமையாற்றிய இரு சிற்றூழியர்கள் கடமை நேரத்தில் தபால் நிலையவளவுக்குள் வைத்து ஆயுதப்படையினரால் தாக்கப்பட்டனர் தாக்குதலுக்குள்ளான பருத்தித்துறை ஓராங்கட்டையடியைச் சேர்ந்த இளைஞரும், சதாவதானி கதிரவேற்பிள்ளை சன சமூக நிலையத்திற்கு அண்மையில் வசிக்கும் இவ்விரு இளைஞர்களும் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்வூழியர்கள் கடமையிலிருக்கும் போது தாக்கப்பட்டமைகுறித்து, அகில இலங்கை தபால், தந்தி சிற்றூழியர் சங்கம் இலங்கை தபால் அதிபர்கள் சங்கம் ஆகியனவற்றிற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊழியர்கள் தாக்க படுவதனல் பாதுகாப்பு இன்மையால் தம்மால் கடமைகளைச் செய்ய முடியாது என்று ஊழி

(5-ம் பக்கம் பார்க்க)

## "ஜீப்பில் வந்த 6 பேர் 2 தடவைகள் சுட்டனர்"

### ஆலை உரிமையாளர் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

''தனது மில்லில் இருந்த பாது ஜீப்பில் வந்த 6 பேர் விசாரணைக்காக தன்னை கூட்டிச் சென்று 2 தடவை சுட்டதாக, வவனியாவில் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஆலை உரிமையாளர் சபாநாதன் பொலிஸாருக்கு அளித்த வாக்கு மூலத்தில் தெரிவித்தார்.

விசாரணைக்காக தனியான இடமொன்றுக்கு கூட்டிச் சென்றதாகவும் பின் ஓரிடக்திற்கு கொண்டு வந்து கைகளை

[8ம் பக்கம் பார்க்க]

## 'ஓய்வு எடுக்கிறுர்கள்..'

(கொழும்பு)

'வடபகுதி பயங்கரவாதிகள் இப்போது சற்று ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கிறுர்கள். ஆயினும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தின் மீது அவர்கள் குண்டு எறிந்து தாக்கமுயன்றுர்கள். அவர்களுக்கு நல்ல பதிலடி கொடுக்கப்பட்டது பொலிஸ் நிலையத்துக்கு சேதம் எதுவும் ஏற்படவில்லை' என்று அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்று நிருபர்களிடம் கூறினர்.

## யாழ். ஐக்கிய வி. சங்கத்தின் ஊழியர்கள் இன்று அடையாள வெளிநடப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐக்கிய வியாபாரச் சங்க தலைமைக் காரியாலய மற்றும் வடபகுதியிலுள்ள சங்கக்கிளை ஊழியர்கள், இன்று நண்பகல் அரைநாள் அடையாள வெளிநடப்புச் செய்தவர்.

தங்கள் உயிருக்கு ஆபத்து ஏற்படக் கூடிய சூழ்நிலையில் குடும்பத்தை காப்பாற்றுவதற்காக ஈடுபடவேண்டியுள்ளதையும், தங்களுக்கு தொழில் தந்து கொண்டிருக்கும், சங்கத்திற்கு பொருள் நட்டம் ஏற்படுவதையும் பொது மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காக ஊழியர்கள் வெளிநடப்புச் செய்கிறுர்கள்.

[8ம் பக்கம் பார்க்க]

## காப்புறுதி கோரிக்கை நிராகரிப்பு!

### நீதிமன்றம் செல்ல சங்கம் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐக்கிய வியாபாரசங்கத்தினர் முழுமையான காப்புறுதி ஒன்றை கொண்டிருந்த போதிலும், இவ்வருடம் ஏப்ரல் 9ம் தேதி கட்டடம் தீக்கிரையானதற்கு, சங்கத்தின் நட்டஈட்டு கோரிக்கையை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நிராகரித்துள்ளது.

காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் இந்த முடிவை எதிர்த்து நீதிமன்றம் செல்வதென்று சங்க இயக்குநர் சபை தீர்மானித்துள்ளது.

ஜனதிபதி நிதியிலிருந்து உதவித் தொகை வழங்குமாறு விடுத்தவேண்டுகோளும் பயனளிக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

தற்போதுள்ள நிலையில் பங்காளரின் விசேட பொதுக்

(5-ம் பக்கம் பார்க்க)

## நாளை கப்பல் நூல் விழா

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இந்துவிடுதியில்நாளை சாலை 10 மணிக்கு பத்திரிகையாளர் ராஜகோபால் எழுதிய

[8ம் பக்கம் பார்க்க]

## பல்கலைக்கழக ஜீப் கிடைத்தது

### ஆனல் பாவிக்க முடியாது

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்ட ஜீப்வண்டி, நேற்றுக்காலை பல்கலைக்கழக முன் வாயிலில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்டது

கடந்த சனிக்கிழமை கடத்திச் செல்லப் பட்ட இந்த ஜீப் வண்டி இப்பொழுது பாவிக்க முடியாத நிலையில் இருப்பதாகவும், சுமார் 30 ஆயிரம் ரூபாவரை சேதமுற்றிருப்பதாகவும் யாழ் பொலிசில் புகார் செய்யப்பட்டது.

வேறொரு வாகனத்துடன் ஜீப்வண்டியைக் கட்டி இணைத்தே பொலிஸ் நிலையம் கொண்டுசென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [மா]

## மாநகரசபை வான் கடத்தப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகர சபைக்குச் சொந்தமான வான் ஒன்றை துப்பாக்கி முனையில் நேற்று பிற்பகல் நான்கு இளைஞர்கள் கடத்திச் சென்றுள்ளனர்.

வெலிங்டன் சந்தியில் வைத்து இந்த வானைக் கடத்தியபோது இரு மணி நேரத்தின் பின் ஒப்படைக்கிறோம் என்று கூறிவிட்டுச் சென்றனராம். [க]

## பஸ் பிரயாணிகளுக்கு இனிப்பான செய்தி: காரைநகர், பருத்தித்துறை டிப்போக்கள்

### திங்கள் முதல் மீண்டும் இயங்கும்!

(ஏ. வி. மாணிக்கம்)

கொள்ளைச் சம்பவங்களின் எதிரொலியாகவும் பாதுகாப்பின்மை காரணமாகவும் மூடப்பட்ட, வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை, காரைநகர் பஸ் டிப்போக்கள் இம்மாதம் 8ம் திகதி திங்கட்கிழமை திறககப்பட்டு மீண்டும் தொடர்ந்து இயங்கவுள்ளன!

சபையின் பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு க. தனபாலசிங்கம் நேற்றுக் காலை இத்த வலைத் தெரிவித்தார்.

கொழும்பு சென்றிருந்த வ பி போ சபைத் தலைவர் திரு எஸ் கன ரத்தினம், போக்குவரத்து அமைச்சருடனும்பாதுகாப்பு பந்தோபஸ்து அமைச்சருடனும் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்தே குறிப்பிட்ட இரு கிளை பஸ் டிப்போக்களும் மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொதுசன தொடர்புஅதிகாரிவிளக்கினுர்.

நேற்று யாழ்ப்பாணம் திரும்பிய திரு கனகரத்தினம் கோண்டாவிலிலுள்ள யாழ் பஸ் டிப்போவில் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடாத்தினுர்

கடந்த மே மாதம் 17ம் திகதி பருத்தித்துறை-காரைநகர் பஸ்டிப்போக்கள் மூடப்பட்டு அங்கிருந்த சகல பஸ்களும், ஊழியர்களுடன்கோண்

[5ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

3 ஸ்ரீ தொடர் இலக்கம் உள்ள ஒஸ்ரின் கேம்பிறிஜ் (Austin Cambridge) கார் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு S. வேலாயுதம், ''முருகன் ஸ்ரோஸ்'' பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை (மகாவித்தியாலயத்திற்கு அருகாமை). 19

டெலிக்கா வான் 38 சிறீ புதிய நிலையில் 5 கதவுகள் ஒற்றை பார் 'தூக்கு பெடில்' ரூபா 65,000/- 466/4 மூத்த தம்பி அவன்யு நாவலர் வீதி, தொலைபேசி 22029. 18

ஜெனறேற்றர் (Robin) புதியது G L 151 1½ கி. லோல்ற், 1500 வாற்ஸ் விற்பனைக்குண்டு. தொடர்பு க. கோபாலசிங்கம், 852/13 செட்டியார் தோட்டம் பருத்தித்துறை வீதி, நல்லூர். 13

84ஸ்ரீ 5428 யமகா 125 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: நா. துரைசிங்கம் விளையாட்டு அரங்கு வீதி, கல்வியங்காடு யாழ்ப்பாணம். 2031

கோண்டாவில்மேற்கு, குமர கோட்டம் சகல வசதிகளுடன் 4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: உரும்பிராய், 'யூனிபோ'க்கு முன்பாக. M.S.பாலன், உரும்பிராய் தெற்கு. 2049

ஆலங்குழாய் வாசிகசாலைக்கு முன் வீடு கட்டக்கூடிய 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க; சிவராசா, ஆலங்குழாய், சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய். 46

திருநெல்வேலி கிழக்கு ராமலிங்கம்வீதியில் 3பரப்புக்காணியும் 1800 சதுர அடி வீடும், சாவகச்சேரி தேவாலய வீதியில் 5½ பரப்பு காணி துண்டுகளாக பிரித்தும் கொடுக்கப்படும், மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியில் வீட்டுடன் 8 பரப்புக் காணி, மானிப்பாய் சங்கரப்பிள்ளை வீதியில் 4பரப்பு காணி, யாழ்ப்பாணம்கொழும்புத்துறையில் துண்டி வீதியில் 3 பரப்பு காணி, காங்கேசன்துறை பட்டினசபை எல்லைக்குள் சுற்றுமதில், மலகூடம் கிணறுடன் கூடிய 5 அறை கொண்ட பூர்த்தி செய்யாத நிலைமட்ட வீட்டுடன் 4பரப்பு காணி. தொடர்பு கொள்ளவும் குயிக்ஸ் என்ரபிறைசஸ், 533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 50

மண்ணெண்ணையில் இயங்கும் மோட்டாருடன் கூடிய மிகவும் சக்திவாய்ந்த கிருமிநாசினி தெளிகருவி அறுபது அடி தூரத்திற்கோ உயரத்திற்கோ தெளிக்கக் கூடியது. மாமரங்கள் மற்றும் யாந்த மரங்களுக்கும், முந்திரிகைத் தோட்டங்கள், காய்கறித் தோட்டங்கள் நெல்வயல்கள் முதலியவற்றிற்கும் கிருமிநாசினியைச் சொற்ப நேரத்தில் தெளித்துக் கொள்ளக் கூடியது. மிகவும் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் தொடர்பு கொள்க. அரசரத்தினம் கந்தன் அருள், 54, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23175. 51

## விற்பனைக்கு

லிஸ்ரர் டீசல் ஜெனறேற்றர் 16 25KVA 21.6 குதிரைவேகம் மிகவும் கொஞ்சமே பாவிக்கப்பட்டது. விற்பனைக்குண்டு. நேரில் பார்ப்பதற்கும் விலை பேசுவதற்கும் தொடர்பு கொள்க: அரசரத்தினம், கந்தன் அருள், 54, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23175. 52

கட்டுடை, நவாலி றோட்டில், பனை, புளியுடன் கூடிய 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பரப்பு 20,000 ரூபா. தொடர்பு: விளம்பர இல:53. C/o, ஈழநாடு. 53

இரண்டு 8 சிறீ மொறிஸ் ஒகஸ்போட் 7 சிறீ வோக்ஸ்வகென் 1300 8 சிறீ வோக்ஸ்வகென் 9 சிறீ வோக்ஸ்வகென் 8சிறீ 404 Peuggot 12 சிறீ 404 Peuggot, 8 Sri Ford Cortina. பிரதி சனிக்கிழமை பார்வையிடலாம். தொடர்பு கொள்ளவும். குயிக்ஸ் என்ரபிறைசஸ், 533, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் 49

## தேவை

Marketing Assistant தேவை. தகுதி திறமையுடையவர்கள் 2-ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும் டைனமிக் என்ஜினியரிங் லிமிட்டெட், 43, பாங்ஷால்வீதி. யாழ்ப்பாணம். 45

கிளிநொச்சி பால் சபைத் தொழிற்சாலைக்கு அனுபவம் வாய்ந்த எலெக்ரிசன் தேவை சம்பளம் தகமைகளுக்கேற்ப வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் தங்கள் எழுத்து மூலமான விண்ணப்பம் தகமைச் சான்றிதழ்களுடன் ஒக்ரோபர் 10ம் அல்லது 11-ம் திகதி காலை 10 மணிக்கு மேற்படி காரியாலயத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு சமூகம் தரவும். முகாமையாளர். 39

## காணவில்லை

தேசிய அடையாள அட்டை இல: 593332365 V, இலங்கை மின்சார சபை அடையாள அட்டையும் 2-10-84 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விசாலத்திற்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ சமர்ப்பிக்கவும். சன்மானம் வழங்கப்படும். ஐயாத்துரை ஆனந்தராசா, தெற்கு உரும்பராய். 44

எங்கள் வீட்டில் இருந்த சாவித்திரி என்ற பிள்ளையைக் காணவில்லை. 4 அடி உயரம், வெள்ளை நிறம், மயிர் கட்டையாக வெட்டப்பட்டுள்ளது. கால் ஒன்று கட்டை. தயவு செய்து இவரைக் கண்டோர் அறிந்தவர்கள் கீழே உள்ள விலாசத்திற்கு தகவல் தரவும் அல்லது ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். வீ. சிவப்பிரகாசம், பழைய வீதி, கோப்பாய் தெற்கு. 34

## FOR SALE

Motor Cycle-Honda CG 125 Deluxe Model. First owner in topping condition. Low milage. 88 Sri series. Inspected at 9A, Vidan's Lane, Chundikuli. 27

Baby Belling Cooker, Rice Cooker Kenwood Mini, Electric Kettle, Dinner set, Sarees, Books and other household items. 6, St. Anne's Church Road off Colombo-gam Road, Chundikuli 20

## மகா கும்பாபிஷேகம்

[புலோலி]

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அமைக்கப்பட்ட நாச்சிமார் ஆலயத்தினதும், நாகதம்பிரான் ஆலயத்தினதும் மகா கும்பாபிஷேகங்கள் அண்மையில் சிறப்பாக நடைபெற்றன.


## வாடகைக்கு

யாழ்ப்பாணம் நகர சபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய தரமான வீடு தேவை. ஜே. அல்பிறட் 59, ஒல்பாக் றோட், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு அறிவிக்கவும். 31

## கல்வி

தனிப்பட்ட முறையில் ஆரம்பத்திலிருந்து ஆங்கிலப் பேச்சு (O/L), (A/L) ஆங்கில இலக்கண இலக்கியம்( Shakespeare Poetry Prose) கற்றுக் கொடுக்கப்படும். இன்ஸ்பெக்டர் குருசாமி இல்லம், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். 2051

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



செல்வன்
பார்த்தீபன்
[தீபன்]

கோண்டாவில் தெற்கை சேர்ந்த யோகநாதன் பூமா தம்பதிகளின் செல்வப்புதல்வன் பார்த்தீபன் தனது முதலாவது பிறந்த தினத்தை வெள்ளிக்கிழமை (5-10-84) இன்று கோண்டாவிலில் கொண்டாடுகிறார். இவரை அறுபத்து நான்கு கலைகளும் பெற்று நீடூழிகாலம் வாழ அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சவுதி சித்தப்பாமார், இத்தாலி மாமன்மார், மாமிமார், சூரி மாமா, சித்திமார், அன்ரிமார், பலாலி பெரியப்பா பெரியம்மா, திருமலை மாமா, மாமி, பிள்ளைகள் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் வாழ்த்துகிறார்கள். (47)

## வெற்றிடங்கள்

| | |
|---|---|
| FITTERS | (பொருத்துனர்) |
| WELDERS | (ஓட்டுனர்) |
| BLACKSMITHS | (கொல்லர்) |
| TINKERS | (உலோக வேலையாளர்) |
| CARPENTERS | (தச்சர்) |

யாழ் நகரில் எமது வேலைத்தளத்தில் மேற்கண்ட பதவிகளுக்கு வெற்றிடம் உள்ளது. பூரண விபரங்களுடன் 12ம் திகதிக்கு முன் மனுச் செய்க.

**டைனமிக் என்ஜினியரிங் லிமிரெட்**

43, பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்.

## முக்கிய அறிவித்தல்

## மின் விநியோகம்

1984-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி தொடக்கம் மாலை 5-00 மணிவரை முக்கிய பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டு யாழ்ப்பாணம் 132, கே. வி. மின் மார்க்கம், அனுராதபுரத்திலிருந்து தடை செய்யப்படவிருப்பதால் சுன்னாகம், காங்கேசன்துறை, வேலணை, கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், முல்லைத்தீவு, துணுக்காய் போன்ற இடங்கள் அடங்கிய கிளிநொச்சி—யாழ். பிரதேசங்களின் பெரும்பாலான பகுதிகளில் மின்சார விநியோகம் தடைப்படும் என அறியத்தருகிறேன்.

மின் பொறியியலாளர்,
யாழ். பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை, சுன்னாகம். 36

## தொழிற் பயிற்சிகள்

பின்வரும் பயிற்சிகளுக்கு 16—23 வயதுக்குட்பட்ட ஆண்களிடமிருந்து 10-10-84 இற்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1 வெல்டிங்: 4 மாதம்
கட்டணம் மாதம் ரூபா 400/-
முழுப்பயிற்சிக்கும் ரூபா 1600/-

2. உழவு யந்திரம்-பராமரிப்பும் செலுத்துதலும்:

2 மாதம்: முழுப்பயிற்சிக்கும் கட்டணம் ரூபா 600/-
சாரதி லைசென்ஸ் பெற ஒழுங்குசெய்யப்படும்.

★ இப்பயிற்சிகளுக்குத் தெரிவுசெய்யப்படுவோர் நிலையத்தில் தங்கியிருத்தல் வேண்டும்.
தங்குமிடமும் உணவும் இலவசம்.

★ பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பணிப்பாளர்,
**வை. எம். சீ. ஏ.**
**இளைஞர் பயிற்சி நிலையம்**
பரந்தன். 43

## WEEKEND CLASSES

ஆரம்பம் 6-10-84 சனிக்கிழமை

**85 AUG** பிரிவு I
7-00—8-00 பரப்பும் கனவளவும்
8-00—9-00 ஆப்பு

பிரிவு II
11-00—12-00 நேர்கோடு
12-00—1-00 உராய்வு

**86 AUG**
9-00—10-00 சமன்பாட்டின் தீர்வுகள்
10-00—11-00 திருப்புதிறன், இணை
(முழுப் பாடப் பரப்பும் நிறைவாக்கப்படும்)

ஆசிரியர்: Mr. Krishna B.Sc.

நடைபெறுகின்றது
DAY CLASS திங்கள் — வெள்ளிவரை
விபரங்கட்கு:
**NEW MASTER INSTITUTE**
**B. M. C. LANE JAFFNA**

# சோவியத்துக்காக உளவுபார்த்த அமெரிக்க (எவ்.பி.ஐ.) ஏஜண்ட் கைது!

## எவ்.பி.ஐ. சரித்திரத்தில் முதல் சம்பவம்

லாஸ் ஏஞ்சல்ஸ், அக், 4,

சோவியத் யூனியனுக்காக அமெரிக்காவில் உளவுபார்த்ததாக அமெரிக்க எவ். பி. ஐ. புலனாய்வுத் துறையின் சிரேஷ்ட ஏஜண்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரே அமெரிக்காவுக்குத் துரோகமிழைக்கும் வகையில் சோவியத்துக்காக உளவு பார்த்த முதலாவது எவ். பி. ஐ. ஏஜண்ட் என்றும் அறிவிக்கப்பட்டது.

ரிச்சர்ட்மில்லர் என்ற இந்த எவ் பி. ஐ. ஏஜண்ட் (பெடரல புறா ஒவ் இன்வெஸ்டிகேஷன்ஸ்) கடந்த இருபது வருடகாலமாக இப்புலனாய்வுத்துறையில் பணியாற்றிவரும் ஒரு சிரேஷ்ட அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது.

வேறு இரு சோவியத் பிரஜைகளுடன் சேர்ந்தேஇவர் அமெரிக்காவில் அரசியல் மற்றும், உளவு வேலைகள் சம்பந்தப்பட்ட பலமுக்கிய அந்தரங்க விடயங்களை சோவியத் யூனியனுக்காக உளவு பார்த்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

எவ். பி. ஐ. தலைவர் இவரின் இந்த உளவுவேலைகளால் எவ் பி. ஐக்கு ஏற்பட்ட நஷ்டம் பற்றித்தெரிவிக்க மறுத்துவிட்டார். ஆயினும் பலமுக்கியமான தஸ்தாவேஜுக்கள் உட்பட அமெரிக்காவின் இரகசியவிடயங்கள் பல குறித்து ரிச்சர்ட்மில்லர் என்ற அந்த ஏஜண்ட் உளவுபார்த்துள்ளார் என்று தெரிவித்தார்.

ரிச்சர்ட்மில்லர் அவரது லாஸ் ஏஞ்சல்ஸ் இல்லத்தில் வைத்தே கைதுசெய்யப்பட்டார். இவரது இரு சோவியத் சகாக்களும் கைது செய்யப்பட்ள்ளனர்.

விரைவில் வழக்குத்தாக்கல் செய்யப்படவிருக்கின்றது. இவர்கள் குற்றவாளிகளாகக் காணப்பட்டால் ஆயுள்காலச் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## மாஜி ராணுவ உத்தியோகத்தரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

பூநகரியிலுள்ள தோட்டம் ஒன்றில் பணியாற்றிவந்த ஓய்வு பெற்ற ராணுவ உத்தியோகத்தர் ஒருவரைக் காணவில்லை என்று யாழ். பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை பாண்டியந்தாழ்வைச் சேர்ந்த வேலாயுதபிள்ளை வடிவேற்கரசு (வயது65) என்பவர் கடந்த 23ம்திகதி பூநகரி தோட்டத்திற்கு சென்ருரென்றும் ஆனல் அவர் தற்போது அங்கு இல்லை என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## அரசியல் புகலிடம் கோரி
## செக். மே. ஜெர்மன் தூதரகத்தில் கி. ஜெர்மன் பிரஜைகள் தஞ்சம்!

லண்டன், அக் 4,

சுமார் 50 கிழக்கு ஜெர்மன் பிரஜைகள் மேற்கு ஜெர்மனியில் அரசியல் புகலிடம் தரும்படிகோரி செசோலக்லாவாக்கியாவின் தலைநகரான ப்ராவிலுள்ள மேற்கு ஜெர்மன் தூதரகத்தினுள் நுழைந்துள்ளனர்.

இக்கிழக்கு ஜெர்மன் பிரஜைகளில் பெண்கள்; ஆண்கள் உட்பட சிறுவர்களும் அடங்குகின்றனர்.

இவர்கள்செக்கோஸ்லாவாக்கியாவிற்கு உல்லாசப் பயணிகளாக வந்தே அங்குள்ள மேற்கு ஜெர்மன் தூதரகத்தில் அரசியல் புகலிடம் கோரியுள்ளனர்.

இவர்களின்கோரிக்கை செக்கோஸ்லாவாக்கிய அரசாங்கத்திஞலும், மேற்கு ஜெர்மன்அரசிஞலும் பரிசீலிக்கப்பட்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை கடந்த சிலகாலமாக மேற்கு, கிழக்கு ஜெர்மன் அரசாங்கங்களுக்கிடையே சுமுக உறவு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுவருவது தெரியவந்துள்ளது. இது குறித்து சோவியத் யூனியன் அதிருப்திகொண்டுள்ளதுடன், கிழக்கு ஜெர்மனியையும் எச்சரித்துள்ளது.

## ரூபவாஹினி

மாலை
5-30 நாட்டுவளம்
5-35 சிறுவர் இசை நிகழ்ச்சி (சிங்களம்)
6-00 விளையாட்டுப் பயிற்சி (தமிழ்)
6-15 'பிளாஷ் கோர்டன்' கார்ட்டூர்ன் சித்திரம் (ஆங்கிலம்)
6-40 மருத்துவத் தகவல்கள்
6-55 செய்திகள் (தமிழ்)
7-15 இளைஞர் விவகாரம் (சிங்களம்)
7-45 பொது அறிவுப்போட்டி (சிங்களம்)
8-15 செய்திகள் (சிங்களம்)
8-35 கலைநிகழ்ச்சி (சிங்களம்)
9-10 இசை நிகழ்ச்சி (ஆங்கிலம்)
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
10-30 உலகச் செய்திகள்
10-35 நிகழ்ச்சிகள் முடிவு

## எத்தியோப்பியாவில் கடும் பஞ்சம்: தினம் 40 பேர் பலி!

எத்தியோப்பியா, ஆக 4,

எத்தியோப்பியாவில் மோசமானபஞ்சம் காரணமாக கிராமப்புறங்களில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டு வருகின்றது.

இங்கு சுமார் 40 பேர் தினம் மடிந்து வருகின்றனர். ஆயிரக்கணக்கணவர்கள் இறக்கும்தறுவாயில்இருக்கின்றனர். மேலும்பலர் போஷாக்கின்மையால் நடமாட முடியாதளவிற்கு போஷாக்கின்மையால் வலுவற்றிருக்கின்றனர்.

இத்தகவல்களை எத்தியோப்பியாவில் வரட்சி நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுவரும் சர்வதேச ஸ்தாபனமொன்றைச் சேர்ந்த தொண்டர் ஒருவர் தெரிவித்தார்.

கடும்வரட்சியினுல் பயிர்வகைகள் அழிந்துள்ளன. கிராமப்பகுதிகளுக்கு நீர் விநியோகிக்கும் குழாய்களும் வரண்டு போயுள்ளன. இந்நிலையில் கிராமப்புறமக்கள் பெருமளவில் மரணத்தையே தழுவி வருகின்றனர்.

இவ்வரட்சி நிலை நீடிக்குமானுல லட்சக்கணக்கானவர்கள் இன்னும் சிலமாதங்களில் இங்கு மடிய நேரிடும் என்று நிவாரணப்பணியில் ஈடுபட்டுள்ள ஸ்தாபனமொன்று அறிவித்தது.

பல சர்வதேசஸ்தாபனங்கள் கிறிஸ்தவ தேவாலயசபைகள் என்பன எத்தியோப்பியாவில் ஏற்பட்டுள்ள பஞ்சத்தை நீக்குவதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன. போஷாக்கு உணவுடன் நீர் மற்றும், உணவுவகைகளும் இங்கு இத்தொண்டர் ஸ்தாபனங்களால் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (கி)

## இந்த அரசு தொடர்ந்து இருந்தால் நாட்டின் சில பகுதிகள் இல்லாமல் போய்விடுமாம்!
### சிறிமா கூறுகிறுர்

(கொழும்பு)

''இந்த அரசு தொடர்ந்தும் பதவியில் இருக்குமானுல் இந்தநாட்டின் சில பகுதிகள் எமக்கு இல்லாமல் போய்விடும். எனவேஉடனடியாகவே பொதுத்தேர்தலை நடத்தி வட பகுதியில் நிலவும் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய ஒரு அரசாங்கத்தை நிறுவுவதற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்' பொதுத்தேர்தலை நடத்தும்படி அரசாங்கத்தை கேட்கவேண்டும்

இவ்வாறு ஸ்ரீ லங்காசுதந்திரக்கட்சியின் தலைவர் திருமதி சிறிமாபண்டாரநாயக்க மகாவெல என்ற இடத்தில் நடைபெற்ற பிரசாரக்கூட்டமொன்றில் பேசுகையில் கூறியுள்ளார் நாத்தாண்டிய சிறிலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகர் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திருமதி பண்டாரநாயக்காவை வரவேற்பதற்காக நீலநிறக்கொடிகளுடன் மின்சார சோடனைகள் அமைசகப்பட்டிருந்தன. ஆனுல் அவை இராவோடு இரவாக விசமிகளால் அறுக்கப்பட்டு மாற்றுக் கட்சியொன்றின் சின்னங்கள் தொங்கவிடப் பட்டிருந்தன

இந்த அரசுபதவிக்கு வந்ததும் வேலையில்லா திண்டாட்டம் ஒழிக்கப்படும் என்று கூறப்பட்டது. ஆனுல் இப்பொழுது அவர்களின் பத்திரிகைகளே வேலையில்லாதிண்டாட்டம் அதிகரித்திருப்பதை ஒப்புக்கொள்கின்றன. உபதேர்தல்களைத் தங்களுக்கு 'வாசி' என்றுகருதும் இடங்களில் மட்டுமே வைக்கிருர்கள். மக்கள் ஒற்றுமையுடன் குரல் எழுப்பியதின் காரணமாகத்தான் குண்டசாலை, மின்னேரிய ஆகிய இடங்களுக்கு உபதேர்தல் நடத்துகிறுர்கள். மக்கள் ஒன்றுபட்டால் சட்டபூர்வமாக இந்தஅரசைக்கவிழ்த்து

(7-ம் பக்கம் பார்க்க)

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து
LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு
உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல்
உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'
முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து
உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'
LANKA CEMENT LIMITED
சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது
'லங்கா சீமெந்து'
தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள
காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்




விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605

### மணிவாக்கு

சந்தனமரத்தைச் சுற்றி இருக்கும் பாம்பின் விஷத்தால் சந்தனமரம் கெடுவதில்லை அதுபோல் நல்லவர்களுக்குக் கெட்டவர்கள் சேர்க்கை ஏற்பட்டாலும் சந்தன மரத்தைப்போல் உலகுக்கு நன்மை புரிந்து வருவார்கள்.

— ஆசார்யர் அருள் வாக்கு.

# நமதுநோக்கு

## ஹொங்கொங் பற்றிய சமாதான உடன்படிக்கை

பேச்சுவார்த்தை மூலம் சிக்கலான பிரச்னையை வருடங்கள் கழிந்தாலும் தீர்க்கலாமென்பதற்கு ஹொங்கொங் நல்ல எடுத்துக்காட்டு.

பிரிட்டனின் குடியேற்ற நாடாக இருந்து மீன் பிடிக்கு உதவிய இச் சிறு தீவு இந்தநூற்ருண்டில் பல தரப்பட்ட வாழ்வையும் தாழ்வையும் கண்டது. இன்று உலகின் துறைமுகங்களில் ஒரு கேந்திர ஸ்தானத்தை வகிக்கும் ஹொங்கொங் பற்றி கேள்விப் படாதவர் யாருமுண்டா? வியாபாரம் வர்த்தகம் தழைக்க உலகிலுள்ள எந்தப் பொருளேயும் தீர்வின்றி, தங்குதடையின்றி வழங்கும்துறைமுகமே ஹொங்கொங்.

சீனப்பிரதேசத்தின் முகத்துவாரம் ஹொங்கொங் என்பதும் இன்ஞெரு அம்சம். ஆனுல் இன்று பிரிட்டனின் கையிலிருந்து செழிப்படைந்த இந்த அற்புதச் சொத்தை பழைய ஒப்பந்தத்தின்படி 99 வருடகுத்தொகைக் காலம் முடிந்ததும் 1997ல் சீஞவுக்கு பிரிட்டன் கையளிக்குமா என்பது கேள்விக் குறியாக விருந்து வந்தது.

இன்று பிரிட்டனில் ஆட்சியிலிருக்கும் திருமதி தட்சரின் கன்சவேட்டிவ் கட்சி ‘போக்லன்ட்’ போரில் பெற்ற வெற்றியின் பெருமிதத்தால் சீஞவுடன் ‘சண்டித்தனம்’ பேசுமென்று கருதப்பட்டது.

இரண்டு வருடங்கள் சமாதானப் பேச்சுக்கள் இழுபறிப்பட்டன. நவசீனம் தனது உடைமை ஹொங்கொங் என்பதில் எள்ளளவும் சந்தேகமடையவில்லை. சிக்கல் எங்கே இருந்தது?

இன்று உலகத்தின் கவனத்தைக் கவர்ந்திருக்கும் இந்த முதலாளித்துவத்தின் சுவர்க்கலோகத்தைச் செஞ்சீஞவுக்குத் தாரை வார்த்துக் கொடுப்பதா? பிரிட்டனுக்கு இதுபற்றி என்றுமில்லாத் தயக்கம் ஏற்பட்டது நியாயமானது.

35 வருடத்தில் பெரு வளர்ச்சிகண்ட நவசீனத்துக்கு பிரிட்டனின் தாக்சம் அர்த்தமற்றதாகக் காணப்பட்டது. குடியேற்ற நாட்டின் உரிமைகள் இன்றைய சுதந்திர உலகில் காற்றில் பறக்கும் காற்ருடிகளே!

கம்யூனிஸ்ட் சீஞ தனது சட்ட உரிமை எவ்வளவு பலமாக இருந்தபோதும், தங்கள் நாட்டின் அரசியல், பொருளாதார அடிப்படைக் கொள்கைகளை முதலாளித்துவ ஹொங்கொங் மீது திணித்து அனுவசியப் பிணக்கையும் பூசலையும் விருத்திசெய்ய என்றும் விரும்பவில்லை.

சமாதான சகவாழ்வின் ஐந்து கோட்பாடுகளின் அடிப்படையில் சீஞ சகல நாடுகளுடனும் நட்புறவு கொள்ள முயல்கின்றது. இந்திய எல்லைப் பிரச்னை இதற்கொரு புறநடையென்று கருத நேரிட்டாலும் மூன்ரும் உலகுடன் சேர்ந்து நிற்கும் சீஞ சமாதானத்தையே விரும்புவதை நாம் மறுக்க முடியாது. மக்கள் உழைப்பில் உயர்ந்த சீஞ தன்னைப் பற்றிப் பெருமைகொள்ள இடமுண்டு. ஆனுல் அப்பெருமை அகங்காரமாக அர்த்தமற்ற போர்க்கோலமாக மாறும் சாத்தியம் இதுவரைக்கும் இல்லையெனலாம்.

இந்தப் பெரும் பண்பே பிரிட்டனுடன் ஒரு சமாதானத் தீர்வை ஏற்படுத்த உதவியது: 1997ல் ஹொங்கொங் சீஞவுக்கு சொந்தமாகின்றது; அதன் இறைமையும், பாதுகாப்பும் சீஞவுக்கே உரியது; ஆனுல் ‘சீன ஹொங்கொங்’ என்ற பெயரில் அமைக்கப்படவிருக்கும் விசேட ஆட்சி இத்தீவின் பொருளாதார சமுதாய விவகாரங்களில் அதற்கு அக்காலத்தில் (1997) நிலவும் அமைப்பு முறைக்கு உத்தரவாதம் அளிக்கும்.

சீஞ இதனைச் சடுதியில் குழப்பிவிட முயலாது. சோஷலிச அமைப்பில் பலமடைந்து வரும் உலகின் மிகப்பெரிய ஜனத்தொகை கொண்ட பரந்த தேசம் இதற்கு பங்கம் விளைக்க முயல்வது யானை சுண்டெலியுடன் போட்டி போடுவதற்கு சமமானது.

வரலாற்று ரீதியிலே பார்த்தாலும் பிரிட்டன் தனது வெற்றிக் கொடியை இன்னும் 13 வருடங்களுக்கு அங்கு பறக்கவிடவேண்டிய அவசியமுண்டா என்ற கேள்வி எழுகின்றது.

எம்மைப் பொறுத்தளவில் காலத்தின் கோலம் எவ்வாறு காணப்படுகிறதென்பதை ஹொங்கொங் காட்டுகின்றது.

பழமையிலிருந்து நாம் பாடங்கள் படிக்க வேண்டும், ஆனுல் இன்றைய நிலைமை, இதனுல் ஏற்படக்கூடிய வருங்கால வாழ்வு -இவற்றிற்கு இப் பாடங்கள் எவ்வாறு பயன்படுமென்ற தீர்க்கதரிசனம் விருத்தியடைந்த நாடுகளுக்கு அவசியம்.

அந்த வழியில் நாமும் எமது நாட்டை ஆக்கபூர்வமான பாதையில் எடுத்துச் செல்ல அது பெரிதும் உதவும்.

## சிறியேமை மறக்கலாமோ!

காரறிவைக் களைந்து கற்ருேர் காமுறும்
பேரறிஞராக விளங்க பணிவலாட்டி நினது
காருணியம் வேண்டு மம்மா ஞாலங் கெட்டுச்
சிரழியலாமோ சிறியேமை மறக்க லாமோ ?

—மணிமன்றன்

# மட்டக்களப்பில் இன்றுள்ள சூழ்நிலை

மட்டக்களப்பில் அண்மையில் ஏற்பட்டுள்ள சில அசம்பாவித சம்பவங்களையடுத்து ஆயுதப்படையினரின் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

அரசாங்க திணைக்களங்களில் நடைபெற்ற உபகரணங்கள் கொள்ளை, களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய தாக்குதல்கள் உட்பட பல்வேறு சம்பவங்களையடுத்தே இத் தேடுதல் நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன,

## செய்திக் கடிதம்: நமதுநிருபர் இரா. உதயகுமார்

இத்தேடுதல் நடவடிக்கையின் போது தேசிய அடையாள அட்டைகள் இன்றி பொது இடங்களில் நடமாடுவோர் வாகனங்களில் பயணம் செய்பவர்கள் தீவிரமாக விசாரணை செய்யப்பட்டு வருகிருர்கள்.

மட்டக்களப்பு-கல்முனை வீதியில் கல்லடிப் பாலத்திலும் மட்டக்களப்பு - வாழைச்சேனை வீதியில் ஊறணிச் சந்தியிலும் வாகனங்கள் மறிக்கப்பட்டு அடிக்கடி சோதனைகள் இடம் பெறுகின்றது.

இந்நிலையில் அடையாள அட்டை இல்லாதவர்கள் தங்கள் அடையாள அட்டைகளை தாமதமின்றி பெற வேண்டுமென்றும் அப்படிப் பெருதவர்கள் பொலிஸ் நிலையங்களில் வழங்கப்படும் விசேட அடையாள அட்டைகள்பெற வேண்டுமென்றும் எக்காரணம் கொண்டும் ஆள் அடையாளத்தை நிரூபிக்க கூடிய சான்றுகள் இன்றி வெளியில் நடமாடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் பாதுகாப்பு படையினர் ஆலோசனைகள் கூறுகிருர்கள்.

அரசாங்க திணைக்களங்களில் ஏற்பட்ட தட்டச்சு, ரோணியோ இயந்திரங்கள் கொள்ளைகளையடுத்து அவ்அலுவலகங்களில் இது தொடர்பான அலுவல்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. இது வரை கொள்ளையடிக்கப்படாத திணைக்களங்களிலுள்ள மேற்படி இயந்திரங்களைப் பாதுகாப்பதில் திணைக்கள அதிகாரிகள் தீவிர கவனம் செலுத்தியுள்ளனர்.

சில திணைக்களங்கள் இவ் இயந்திரங்களை அலுவலகம் மூடப்பட்ட பின்னர் பொலிஸ் நிலையங்களில் ஒப்படைத்து மறு நாள் மீண்டும் கொண்டு செல்வதைக் காணக் கூடியதாக உள்ளது.

வலையிறவு, மண்முனை ஆகிய துறைகளில் ஏற்பட்ட படகு இயந்திரங்கள் கொள்ளைகளையடுத்து கன்னன் குடா, அம்பிலாந்துறை மண்டூர்

(5-ம் பக்கம் பார்க்க)

## இணுவில் சிவகாமி அம்மை தங்க விமான பவனி

சக்தி வழிபாடாகிய அம்பிகை வழிபாடு மிகவும்பழமையுடையது. மொகஞ்சதாரோ, கரப்பா என்னும் இடங்களில் அகழ்வாராய்ச்சியில் உலக அன்னையின் மண்சிலைகள் கண்டெடுக்கப்பட்டன. ஆய்வாளர்களின் கருத்துப்படி சிந்துவெளி நாகரிகக்காலம் ஏறத்தாழ கி.மு.5000 ஆண்டுகட்கு முற்பட்டது. எனவே சக்திவழிபாடு அதற்கு முன்னரே இருந்து வந்துள்ளமை விளங்கும் தொல்பொருள் ஆய்வுத்துறை பேரறிஞர் சர் ஜான் மார்ஷல் என்பவர், சிந்துவெளிப்பகுதியில் கிடைத்த அன்னையின் சிலைகளைப் போலவே பாரசீகம் மெசபடொமிய, துருக்கி, சிரியா, பாலஸ்தீனம்,சைப்ரஸ், எகிப்து முதலிய பல்வேறு நாடுகளில் கிடைத்த சிலைகளாக இருப்பதனுல் அன்னை வழிபாடு மிகப் பழங்காலத்திலேயே பல நாடுகளிலும் பரவியிருத்தல் வேண்டும் என்று விளக்குகிருர்.

அன்னை வழிபாடாகிய சக்தி வழிபாடு மிகப் பழங்காலந்தொட்டு நாடுமுழுவதும் பரவி வளர்ந்துள்ள பாங்கினை நகரங்களிலும், கிராமங்களிலுமுள்ள சக்தி கோயில்கள் தெளிவாக உணர்த்துகின்றன. ஒவ்வொரு கிராமங்களிலும் நகரத்திலும் வெவ்வேறு பெயரில் வெவ்வேறு வடிவில் சக்தி வழிபாடு நிகழ்ந்துவரக் காண்கின்ரேம்.

இதே போன்று இணுவில் கிராமத்தில் அருள்மிகு சிவகாமியாக சக்தி எழுந்தருளி அருள்பாலிக்கிருள். நவராத்திரி நாயகியாம் அன்னை சிவகாமியின் அருள் உலகுக்கும் குறிப்பாக தமிழ் சமுதாயத்திற்கும் தமது கிராமத்திற்கும் கிடைத்து எல்லாரும் இன்பமாக வாழ வேண்டுமென்ற பொது நோக்கே இணுவில் இந்து மகாசபை ஆண்டுதோறும் நவராத்திரி விழா இறுதி நிகழ்ச்சியாக இணுவில் அருள்மிகு சிவகாமி அம்மன் திருக்கோவிலில் மிகவும் பிரமாண்டமானமுறையில் சிவாச்சாரியமணி சிவஸ்ரீ வை. சபாரத்தினக்குருக்களை பிரதம சிவாச்சாரியராக ஒன்பது சிவாச்சாரியார் மூலம் நவகலச அபிஷேகம், நவசக்தி பூஜை, நவசக்தி அர்ச்சனை, நவசக்தி ஹோமம் நடாத்தி வருகின்றனர். வழமைபோல் இன்றும் இவை நடைபெற்று தொடர்ந்து அன்னை சிவகாமி நவதுவார தங்க விமானத்தில் ஆரோகனித்து அருட் காட்சி கொடுக்கிருள். அனைவரும் கலந்து தமிழ் மக்களின் நலனுக்காக பிரார்த்திப்போமாக.

தி. சி. சண்முகலிங்கம்

### வெள்ளிச் சிந்தனை

## தீவினை தீர்த்தல்

எத்தனைகோடியுகங்கள் அநுபவித்தாலும்தீராதபாவம் சிவ அபராதமாகியஅதிபாதகமாகும். இப்படியான சிவ அபராதத்தை மனமறியச் செய்த தேவர்கள் சூரனுடைய ஆட்சியில் துன்புற்ருர்கள் சிவ அபராதத்தால் ஏற்பட்ட துன்பம் நிறைந்த தேவர்களின் அடிமை வாழ்வை நீக்கியது முருகப்பெருமானின் கருணைச் சிறப்பு என்று கந்தபுராணம் உபதேசிக்கின்றது. மகிஷாசூரனுல் அரசிழந்து வணங்கிய தேவர் பொருட்டு அம்பாள் விஜயதசமியன்று மகிசூனைச் சங்காரம் பண்ணி தேவர்களுக்கு சுதந்திர வாழ்வளித்தாள் என்கிறது தேவிபாகவதம். இவ் வரலாறுகளிலிருந்து இறைவழிபாட்டால் இறைவனுடைய கருணையால் நாம் செய்த தீவினையிலிருந்து விடுபடலாம் என்பதை அறிந்து கொள்வதோடு தீவினையிலிருந்து விடுபட முயல்வதே சரியான மனிதப்பண்பாகும்.

தீவினைப்பயனுகத் துன்பம் வரும்போது தான் செய்தநல்வினைகளைமட்டும் ஞபகப்படுத்திக் கொண்டு ‘‘நல்வினைகள் பலபுரிந்த எனக்கு ஏன் இப்படியான துன்பங்கள் வர வேண்டும் கடவுளும் என்விடயத்தில் கண்முழிக்கிருரில்லை’’ என்பன போலச் சிந்திப்பதும் துன்புறுவதும் அறிவுடைமையாகாது.

சூரபன்மனுல் நாடு, நகரிழந்தும், சூரபன்மனுடைய கொடிய சிறையிலகப்பட்ட தேவர்களை மீட்கவழியறியாதும் வருந்திய தேவர்கள் பலமுறை தமது துன்பங்களைச் சிவபெருமானிடம் முறையிட சென்ருர்கள் கயிலையில் அவர்களுக்குக் இறைவன் முன்னிலைக்குச் செல்லும் அனுமதி கிடைக்கவில்லை அப்படியான சந்தர்ப்பங்களில், ‘ கயிலைக்குக் காவல் இருக்கக்கூடாது நாம் நம்துன்பங்களைச்சென்று முறையிட்டு தீர்த்துக்கொள்ள வசதியில்லாத காவலும் கோவிலும் எதற்கு’’ என்று தேவர்கள் கருதவில்லை நாத்திகம் பேசவில்லை. ‘‘நாம்செய்த தீவினையின் மிகுதியினுலேதான்

(5-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் கருத்து

## குடியேற்றத்தின் நடுவில் சுடலை

தங்களது தலையங்கமும் மேற்படி செய்தியும் வாசித்தேன் கிராமத்தின் நடுவில் சுடலை தற்பொழுது பல இடங்களில் காணப்படுகிறது உதாரணம் கோண்டாவில் உரும்பிராய் போன்ற இடங்களில்இருக்கின்றன. ஊருக்குப் புறம்பாக இருந்த சுடலைகள் காலப்போக்கில் இட வசதி காரணமாக சுடலைக்குப் பக்கத்திலும் குடியேறியுள்ளார்கள்.

யாழ்.மாநகரசபை மின்சாரம் அல்லது எரிவாயுவினுல் இயங்கும் சுடலையை ஸ்தாபிப்பது நல்லது வசதியுள்ளவர்கள் சேர்ந்து உயர்ந்த புகைபோக்கி கொண்ட மின்சாரச் சுடலைகளைக் கட்டினுல் கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் நன்மையாக இருக்கும். வறிய மக்கள் சிரமதான அடிப்படையில் சேர்ந்து இப்படியான நவீன சுடலை கட்டுவதற்கு முன் வர வேண்டும்.

ஆர்.எஸ்.தேவராசா
யாழ்ப்பாணம்

# கிளிநொச்சியில் இ. தொ. கா. இரண்டாக பிளவு!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கி வந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் இரண்டாகபிரிந்து விட்டது.

திரு. கோ. செல்வதியை மாவட்டத் தலைவராகக் கொண்டு ஒருபிரிவும் திரு எஸ் கோபாலை மாவட்ட தலைவராகக் கொண்டு மற்றுமோர் பிரிவுமாக கிளிநெச்சிமாவட்ட இ தொ.கா பிளவுபட்டு ஒவ்வொருவர் தலைமையிலும் நிர்வாக சபை அமைத்து செயல்பட ஆரம்பித்துள்ளது. இவர்கள் ஏட்டிக்கு போட்டியாக இங்கே கூட்டங்களையும் நடத்தி வருகின்றார்கள்.

இரு பிரிவினரும் இங்கு இயங்கி வருகின்ற தலைமைக் காரியாலயத்திற்கும் உரிமை கொண்டாடி வருகின்றனர்.

## மட்டக்களப்பில்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகிய துறைகளிலுள்ள படகு இயந்திரங்கள் பொலிஸ் பாதுகாப்பிற்காக கொண்டு செல்லப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. இதனால் இத் துறைகளில் இதுவரை இயந்திரப் படகுச் சேவைகள் எதுவும் ஆரம்பிக்கப்படாமையால் பொது மக்கள் தனியார் படகுகளில் அதிகக் கட்டணம் செலுத்தி பயணம் செய்கிறார்கள் அதே நேரத்தில் தனியார் படகு இயந்திரங்களும் கொள்ளையடிக்கப்பட்டு வருவதால் மீனவர்கள் தமது இயந்திரங்களையும் படகுகளையும் பாதுகாக்குமாறு கேட்கப் பட்டுள்ளார்கள்.

சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற பஸ் எரிப்பு சம்பவங்களையடுத்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த மண்டூர், திக்கோடை, பழகாமம் உட்பட பட்டிருப்புத் தொகுதி கிராமங்களுக்குரிய பஸ் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

மண்டூர், கொக்கட்டிச்சோலை, கன்னங்குடா, உதவி அரசாங்க அதிபர்காரியாலயம் ஆகியவற்றில் ஏற்பட்ட வானொலி தொலைத்தொடர்பு கருவிகள் கொள்ளைகளையடுத்து இம்மாவட்டத்தில் எக்காரணம் கொண்டும் இனிமேல் எத்திணைக்களத்திற்கும் வானொலி தொலைத்தொடர்பு வசதிகள் செய்துகொடுக்கப் படமாட்டாதென்று தொலைத் தொடர்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசாங்க திணைக்களங்கள் சிலவற்றில் பிரவேசிப்போர் தாங்கள் பற்றியவிபரங்களை நுழைவாசலில் பதிவு செய்த பின்புதான் செல்வதற்கு அனுமதிக்கப் டுகிறார்கள்.

அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த நேரடித்தொலைத் தொடர்பு வசதிகள் யாவும் ரத்துசெய்யப்பட்டு தூரஇடங்களுக்குரிய அழைப்புகளை பரிவர்த்தனை நிலயத்தின் மூலம பதிவுசெய்து பெறவேண்டுமென்று அதிகாரிகள் கேட்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

''புதியவர்களின் நடமாட்டம் குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பயங்கரவாதம் தொடர்பான தகவல்கள் கிடைத்தால் பாதுகாப்பு படையினருக்கு அறிவிக்க வேண்டும்'' என்று படையினர் பொதுமக்களை கோருகிறார்கள். அதே நேரத்தில் இரவு நேரம் வீட்டில் எவராவது வந்து அழைத்தால் கதவுகள் திறக்கவேண்டாமென்றும் தெரிவிக்கிறார்கள்.

இது இவ்வாறிருக்க: அண்மையில் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தாக்குதல்களில் பலியான ஒருவர் மட்டுநகர் இரா. பரமதேவா, மற்றவர் மகிழடித்தீவு வாமதேவன் (ரவி) என்று தமிழீழ விடுதலை புலிகள் யாழ்ப்பாணத்தில் ஒட்டியுள்ள அஞ்சலி சுவரொட்டிகளின் மூலம் உரிமைகோரியுள்ளது.

இது இவ்வாறிருக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசாலை மாணவர்களும் பாதுகாப்புபடையினரால் விசாரணைக்கு அழைத்து செல்லப் படுகிறாகளாம்.

கடந்தமாதம் இறுதியிலிருந்து சில உயர்வகுப்பு மாணவர்களை காணவில்லை என்று பெற்றோர் பொலிசில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிசார் தெரிவிக்கிறார்கள். இதனையடுத்து பெற்றோர் தமது பிள்ளைகளின் நடமாட்டத்தில் அவதானமாக இருக்கவேண்டுமென்று பொலிஸார் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

களுவாஞ்சிக்குடி இலங்கை வங்கிக் கொள்ளையையடுத்து வங்கிப் பாதுகாப்பு வசதிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன. வங்கி சுற்றாடலில் காரணம் இன்றி நடமாடுவோர் வங்கி பாதுகாப்பு ஊழியர்களால் விசாரணை செய்யப்படுகிறார்கள். மட்டக்களப்பு வங்கி அலுவல்கள் வழமைபோல் நடைபெற்று வருகின்ற போதிலும் களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை, செங்கலடி, காத்தான் குடி இலங்கை வங்கி கொடுக்கல் வாங்கல் அலுவல்கள் மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தில் தினமும் ஒரு மணித்தியாலம் நடைபெறுகின்றது.

பொலிஸ் நிலைய கதவுகள் மூடப்பட்டுள்ள போதிலும் தகுந்த காரணம் காட்டுபவர்கள் உள்ளே செல்ல அனுமதிக்கப்படுகிறார்சள். விமான நிலைய பாதுகாப்பு நடவடிக்கையின் பொருட்டு உயரமான கோபுரம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அதில் படை வீரர்கள் ஆயுதபாணியாக நிறுத்தப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க வருடந்தோறும் ஆடம்பரமாக கல்விக்கூடங்கள், பாடசாலைகள், அலுவலகங்களில் நடைபெற்று வந்த வாணிவிழா இம்முறை ஆடம்பரமின்றிஅமைதியாக பூசையும் பிரார்த்தனையுடன் கொண்டாடப்பட்டது

மட்டக்களப்பு நகரில் இ. போ. ச., தனியார் பஸ்சேவைகள் மாலை ஆறு மணியுடன் ஒய்ந்து விடுகின்றன. சன நடமாட்டமும் இரவு 7 மணியுடன் ஒய்ந்துவிடுகின்றன.

## தமிழ்ப் பகுதியில்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஆலைச் சொந்தக்காரர் ஒருவரை ஆயுதப்படையினர் விலங்கிட்டு, துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தினார்கள். இவரது வீட்டுக்கு முன்னால் சிங்கள இளைஞர்கள் கையெழுத்திட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றையும் ஒங்டியுள்ளனர். இத்துண்டுப் பிரசுரத்தில் தமிழ் தீவிரவாத இளைஞர்களுக்குப் 10 ஆயிரம் ரூபாவை இந்த அரிசி ஆலை உரிமையாளர் வழங்கியுள்ளதாக குற்றஞ்சாட்டியுள்ளனர்.

''அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள் ஓதனால் வவனியாவைவிட்டு ஓடிவிட்டார்கள்.

''வவனியாவிலிருந்து தமிழ் வர்த்தகர்கள் ஓடிஒழிய வேண்டுமென்பதே ஆயுதப்படையினரின் நோக்கமாகவுள்ளது

வவனியாப் பகுதியில் ஆயுதப்படையினர் இருக்கவேண்டிய அவசியமே இல்லை!

## வள்ளிச்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்துக்குள் செல்லக்கூட அனுமதி கிடைக்கவில்லை தாம்செய்த தீவினைக்குவருந்தித்தி தவம்செய்து தீவினையைக்குறைக்காது இறைவனைக் குறை சொல்வதால் நன்மையுண்டாகாது எல்லோருக்கும் எல்லாக்காலத்திலும் இன்பமே செய்யும் சங்கரனாகிய சிவபெருமான் எங்களுக்கு இன்பம் செய்வதற்கும் காட்சி கொடுப்பதற்கும் தடையாக இருப்பது நமது தீவினையேயாகும் என்று தெளிந்தவர்களாய் சிவபூசை, தவம் என்பன செய்தனர். இந்திரன் சீர்காழியில் சிவபூசைசெய்தான் மகாமேருமலையில் தவம்செய்தான் தேவர்களைப்போல இறைவனை வணங்கி இவனது அனுக்கிரகத்தை பெறாது செய்யும்முயற்சிகள் வீணாகும்.

துன்பத்தைத் தொலைத்து இன்பத்தைஉண்டாக்க தீவினைகளைப்போக்க இறைவழிபாடு செய்யவேண்டும்.

பொடிகோள் மேனியர்
புலியதன்
அரையினர் விரிதருகரத்
தேந்தும்
வடிகொள் மூவிலை வேலினர்
நூலினர்
மறிகடல் மாதோட்டத்து
அடிகள் ஆதரித்திருந்த
கேதீச்சரம்
பரிந்த சிந்தையராகி
முடிகள் சாய்த்தடி பேண
வல்லார்
தம்மேல் மொய்த்தெழும்
வினைபோமே
-திருஞானசம்பந்தர்

— அருளாளன்

## பஸ். பிரயாணி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டாவில் டிப்போவுக்கு சேவையாற்றுவதற்காக கொண்டு வரப்பட்டன. இந்த டிப்போவிலேயே வடபிராந்திய போ. சபையின் தலைமைக்காரியாலயமும் இயங்கிவருவது தெரிந்ததே.

''கோண்டாவிலிலுள்ள பஸ் டிப்போவில், மற்றைய இரு பஸ் டிப்போக்களிலிருந்து கொண்டுவரப்பட்ட பஸ்கள் நிறுத்திவைக்க போதிய இடவசதியின்மையையும், வாகனப் பராமரிப்பு, அதிக ஊழியர் கடமையாற்றமுடியாத நிலைமைகளையும் அமைச்சர்களின் சந்திப்பின்போது தலைவர் எடுத்துக் கூறியதுடன், வருமானம்மிகவும் பாதிக்கப் பட்டுவருவதாகவும், இதனால் பெரும் லாபத்தை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் அமைச்சர்களுக்குச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இரு டிப்போக்களும் மூடப்பட்டதால், பாடசாலை மாணவர்கள் உட்பட சகல தரத்திலுமுள்ள பிரயாணிகள் போக்குவரத்துச்செய்யமுடியாத நிலையில் இருப்பதாகவும் திரு. கனகரத்தினம் அமைச்சர்களிடம்தெரிவித்திருந்தார். இதன் காரணமாகவே இரு பஸ்டிப்போக்களும் மீண்டும் திறந்து சேவையாற்ற அமைச்சர்கள் அனுமதி வழங்கினார்கள்'' என்று பொதுசனதொடர்பு அதிகாரி விளக்கம் தெரிவித்தார்.

காரைநகர் பஸ் டிப்போவுக்கு 16 பஸ்களும், பருத்தித்துறை பஸ் டிப்போவுக்கு 33 பஸ்களுடன், மொத்தமாக சகல தரத்திலும் 1400 ஊழியர்களும் மீண்டும் கடமையாற்ற அனுப்பி வைக்கப்படவுள்ளார்கள் என்றும், தெரிவித்த திரு. தனபாலசிங்கம் மூன்று பஸ் டிப்போக்களும் தொடர்ந்து திறம்பட சேவையாற்றினால் புதிய பஸ்கள் அனுப்பிவைக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் தலைவருக்கு உறுதி அளித்ததாகவும் சொன்னார்.

''பஸ்டிப்போக்களில் கொள்ளைச் சம்பவங்கள் இனிமேல் நடைபெறாமல் தடுப்பதற்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதா? என்று நமது நிருபர் கேட்டபோது அதுகுறித்து எதுவும் தெரிவிக்க அவர்மறுத்து விட்டார்.

''இங்கு கிடைக்கும் வருமானம் போதாமையால் ஒவ்வொருமாதமும் மத்திய போக்குவரத்துச்சபையிடமும், திறைசேரியிடமும் கடன்பெற்றே டீசல் உதிரிப்பாகங்கள் வாங்க வேண்டியிருப்பதாகவும் இந்த கஷ்டமான நிலையில் கொள்ளைச் சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெற்றால், பஸ்டிப்போக்கள் மூடப்படுவதுடன் இதனை நம்பி ஜீவனம் நடாத்தும் 2,500 தொழிலாளர் குடும்பங்களும் நடுத்தெருவில் நிற்க வேண்டியிருக்குமென்றும் அவர் கவலை தெரிவித்தார்.

### தலைவருக்கு பெரும் வரவேற்பு

இதனிடையே நேற்றுப்பகல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த வ. பி. போ. சபைத்தலைவர் திரு. எஸ். கனகரத்தினத்துக்கு கோண்டாவிலுள்ள யாழ் டிப்போவில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

டிப்போ வாசலில் வைத்து தலைவர் வரவேற்கப்பட்டு, அலுவலகத்துக்கு ஊழியர்களினாலும், தொழிலாளர்களினாலும் அழைத்துச் செல்லப்பட்டு ஏராளமான மாலைகள் அணிவிக்கப்பட்டன

இந்த வைபவத்தில் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் பேசுகையில், ''வருமானம் மிகவும் குறைந்த நிலையில் நாம் நிர்வாகத்தை நடத்திக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் தொழிலாளர்களின் ஒத்துழைப்பில்தான் நமது எதிர்காலம் தங்கியிருக்கிறது இதனை மனதில் கொண்டு, தொழிலாளர்களும், ஊழியர்களும் உற்சாகத்துடன் கடமையாற்றவேண்டும். காரைநகர். பருத்தித்துறை டிப்போக்களை மீண்டும் திறக்க அனுமதி கிடைத்தது. தொழிலாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் கிடைத்த வெற்றி. விஜயதசமி தினமான இன்று இத் தகவலை உங்களுக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்'' என்று தெரிவித்தார்.

## பருத்தித்துறை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, பருத்தித்துறை தபால் நிலையம் நேற்று மூடப்பட்டிருந்தது இச்சம்பந்தமாக பருத்தித்துறை தபால் அதிபர் திரு. சப பதிப்பிள்ளை யாழ் தபால் அத்தியட்சகருக்கு அறிவித்துள்ளார்.

பருத்தித்துறையில் இச்சம்பவங்களைத் தொடர்ந்து பலத்த பதற்டமாக உள்ளது. கடைகள் யாவும் மூடப்பட்டுள்ளன. சந்தைகள் கூடவில்லை. வங்கிகள் யாவும் மூடப்பட்டுக் கிடந்தன. சனநடமாட்டம் இல்லாமல் நகர் வெறிச்சோடிக் கிடந்தது.

வீதிகளில் இராணுவத்தினரும், அதிரடிப்படையினரும் பெருமளவில் காணப்பட்டனர்.

பருத்தித்துறைக்கும், யாழ்ப்பாணத் திற்குமிடையிலுள்ள தொலை, தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டுள்ளது

நேற்று நண்பகலும் பருத்தித்துறையில் சிலபகுதிகளில், குண்டுச் சத்தங்கள் கேட்டதாகவும், இதனைத்தொடர்ந்து வெடிச்சத்தங்கள் கெட்டதாகவும் கூறப்படுகிறது.

துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானவரின் உடலம் யாழ். ஆஸ்பத்திரிச் சவச்சாலைக்குக் கொண்டுவரப் பட்டது. காயமடைந்து மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் ஒருவரை யாழ் ஆஸ்பத்திரிக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்வண்டிகளும், மினிவான்களும் மருதடியிலிருந்து ஆரம்பித்துச் சேவைகளை நடாத்தின,

புனித. சூசையப்பர் தேவாலயத்தில் வடமராட்சி மாணவர் ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட உண்ணாவிரதம் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்தின் இரண்டாவது கட்ட உண்ணாவிரதத்தில் உண்ணாவிரதமிருக்கும் 23 மாணவ, மாணவிகளும் இரண்டாவது நாளைப் பூர்த்தி செய்துள்ளனர். இவ் உண்ணாவிரதிகளின் உடல் நிலைகளை வைத்திய நிபுணர்கள் கண்காணித்து வருகின்றனர்.

## யாழ். ஐக்கிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மாதம் 11ம் தேதி முழு நாளும், வெளிநடப்புசெய்ய ஊழியர்கள் முடிவு செய்துள்ளார்கள். ஊழியர்களின் இந்த முடிவை, சங்க நிர்வாகம் ஏற்றுள்ளது. (க)

## காப்புறுதி..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூட்டத்தை கூட்டி சிலயோசனைகளை முன்வைக்க இயகுநர் சபை தீர்மானித்துள்ளது.

இந்த முடிவுகள் பற்றி சங்கத்தலைவர் வைத்தியக்கலாநிதி வே. யோகநாதன், பங்காளருக்கு அறிவித்துள்ளார்.

(க)


# ஹோம் பிறன்ஸ் லிமிட்.

## யாழ்ப்பாணம் / கொழும்பு
## பகல் பஸ் சேவை

புறப்படும் இடம்: கன்னதிட்டி சந்தி; புறப்படும் நேரம்: காலை 7-30 மணி

**யாழ்ப்பாணத்தில் டிக்கட் பதிவுசெய்யுமிடங்கள்:**

1. ஹோம் பிறன்ஸ் லிமிட், கன்னதிட்டி; தொலைபேசி: 24310
2. நியூ லங்கா சேல்ஸ் சென்ரர், ஆஸ்பத்திரி வீதி, தொலைபேசி: 23596
3. நியூ ப்ரசீதா, ஆஸ்பத்திரி வீதி; தொலைபேசி: 22480
4. அன்னராஜா ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி; தொலைபேசி: 22608

**கொழும்பில்:**

1. ஹோம்பிறன்ஸ் லிமிட், காலி வீதி, பம்பலப்பிட்டி; தொலைபேசி: 589190
2. டையமன் ஸ்ரோர்ஸ், வெள்ளவத்தை; தொலைபேசி: 82978

புறப்படும் நேரம்: காலை 6-30 மணி

# செய்திச்சிதறல்

## மானிப்பாய் இந்து முதலிடம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை மாவட்ட வருடாந்த சாரணர் பாசறை விழா போட்டிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி முதலாம் இடத்தைப் பெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இரு தினங்களாக இவ்விழா இடம் பெற்றது.

இப்போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி இரண்டாமிடத்தையும் வீமன்காமம் மகாவித்தியாலயம் மூன்றாமிடத்தையும் பெற்றன.

15 சாரணர் குழுக்கள் பங்குபற்றிய இப்பாசறை விழாவில் முன்னாள் எம். பி. அமரர் நாவுக்கரசு, அமரர் பாலா ஆகியோர் ஞாபகார்த்தமாக பாசறைகள் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அதிபர் இடமாற்றம்

(கொக்குவில்)

கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் கடந்த ஐந்து ஆண்டுகளாக அதிபராகக் கடமையாற்றிய திரு. ஆ. குருசாமி சண்டிலிப்பாய் வித்தியாலத்திற்கு அதிபராக இடமாற்றம் பெற்றுள்ளார்.

பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் அளித்த பிரியாவிடை வைபவத்தில் மாணவர்கள் ஏராளமான மாலைகளை அணிவித்து அதிபரை கௌரவித்தனர்.

அதிபரின் சேவையைப்பாராட்டி திருமதி செல்வராசா, திருமதி அன்ரனிராஜ், திருமதி பேரம்பலம், திருமதி இராசரத்தினம், திரு. மூ. ஆறுமுகம், திருமதி ம. கணபதிப்பிள்ளை ஆகியோர் உரையாற்றினர்.

## தொலைபேசி பழுது

(மாவிட்டபுரம்)

கைதடி தபால் நிலைய தொலைபேசி அடிக்கடி பழுதடைந்து விடுவதால் அப்பகுதி மக்கள் அவசர தேவைகளுக்கு தொலைபேசி இணைப்பைப் பெறமுடியாமல் கஷ்டமுறுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதடி தபால் நிலைய தொலைபேசி கடந்த இருமாதங்களுக்கு மேலாக செயலற்றுக் கிடப்பதாகவும் இடையிடையே இது திருத்தப்பட்டாலும் ஓரிரு தினங்களுக்குள் மீண்டும் பழுதடைந்து விடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## பாக்குவிலை அதிகரிப்பு

(மாவிட்டபுரம்)

பாக்குவிலை என்றுமில்லாதவாறு அதிகரித்து விட்டதால் வெற்றிலை பாக்குப் பிரியர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாக்கு விலை சிறிது சிறிதாக ஏறி தற்போது மிகவும் உயர்ந்து விட்டதால் வெற்றிலை பாக்கின் விலையும் அதிகரித்து விட்டது. சில கடைகளில் ஒரு பாக்கு ஒரு ரூபாவாகவும் விற்கப்படுவதாக கூறப்படுகிறது.

([illegible] ம் பக்கம் பார்க்க)


1-வது ஆண்டு நிறைவையொட்டி!

[5-10-84 முதல் 30-10-84 வரை]

10% கழிவுடன் சகல தளபாடங்களையும் பெற்றுக்கொள்ள

“ருஜாந்தி பேணிச்சர்ஸ்”

“RUJANTHIE FURNITURES”



★ மகாராஜா குசன் செற் ★ சியஸ்ரா ★ ஆர்ப்பி போம் மெத்தைகள் மற்றும் ஸ்ரீல் தளபாடங்களையும் பெற்றுக்கொள்ள

ருஜாந்தி பேணிச்சர்ஸ்,

234, ஸ்ரான்லி வீதி, (சிறீதர் சினிமா முன்பாக) யாழ்ப்பாணம்.

குறிப்பு:- மெத்தைகளுக்கு மட்டும் 5% கழிவு கொடுக்கப்படும்.

ஒரு வருடத்தில் கூடிய வாடிக்கையாளர்களைப் பெற்றுவிட்ட ஸ்தாபனத்தார் வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.



எஸ்-லோன் வீடுகட்டுவோர் சீட்டிழுப்பு.

பிரத்தியேகமாக எஸ்-லோன் பாவனையாளருக்கு

நீடிக்கப்பட்டுள்ளது

எமது புதிய வாடிக்கையாளர்களும் சீட்டிழுப்பின் அதிர்ஷ்டத்தைப் பெற...

லேசன்ஸ் இல. S/396

S-LON



உங்கள் எஸ்-லோன் பி.வீ.சி. குழாய்களும் இணைப்புகளும் முற்றிலும் இலவசம்!

GARADS

எஸ்-லோன் வீடு கட்டுவோரின் சீட்டிழுப்பில் உங்களுக்கும், உங்கள் வியாபாரிகளுக்கும், ஏன் உங்கள் குழாய்த்தொழிலாளருக்குமே பரிசில்கள் உண்டு.

இது எஸ்-லோன் பாவனையாளருக்கு மூன்று மாதங்கட்கொரு முறை நாம் தரும்பரிசாகும்.

இதோ எஸ்-லோன் பி.வீ.சி. குழாய் உற்பத்தியாளர்கள் தரும் ஒரு வெகுமதி.

நீங்கள் செய்யவேண்டியதாவது:

1. உத்தரவுபெற்ற எஸ்-லோன் வியாபாரி எவரிடமாவது சென்று எஸ்-லோன் குழாய்களையும் இணைப்புகளையும் வாங்குங்கள்.

2. அக்கொள்வனவுக்கு ஓர் பற்றுச்சிட்டினையும் அதனை உறுதிப்படுத்தும் ஓர் உறுதிச்சிட்டையும் கேட்டு வாங்குங்கள்.

3. பற்றுச்சிட்டையும் உறுதிச்சிட்டையும் கீழ்க்கண்ட கூப்பனுடன் எமக்கு அனுப்புங்கள்.

நாம் சீட்டிழுப்பு நடத்துவோம். நீங்கள் அதிர்ஷ்டசாலியானால் உங்கள் உறுதிச்சிட்டிலுள்ள முழுத் தொகையையும் ரொக்கமாக உங்களுக்கே திருப்பித் தருவோம். இதன் மூலம், எஸ்-லோன் தயாரிப்புகளை நீங்கள் முற்றிலும் இலவசமாகப் பெறுவீர்கள்.

பரிசுகள் இதோ:

பிரிவு அ
ரூ. 5000/- முதல் ரூ. 15,000/- வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு ஆ
ரூ. 2500/- முதல் ரூ. 5000/-வரையிலான கொள்வனவிற்கு 10 பரிசுகள்.

பிரிவு இ
ரூ. 2500/- க்குக் குறைந்த கொள்வனவிற்கு 25 பரிசுகள்.

சிறந்த வடிவமைப்புக்கும் வேலைப்பாட்டுக்கும் குழாய்த்தொழிலாளருக்குரிய சன்மானம் ரொக்கம் ரூ 5000/-

வியாபாரிகளுக்கும் பரிசில்கள் உண்டு.

முக்கியம்:

த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட் டினதும் அவர்களது விளம்பர முகவர்களான கெரட்ஸ் அட்வரைசிங் தாபனத்தினதும் ஊழியர்களையும் அவர்களது குடும்பத்தவர்களையும் தவிர்ந்த ஏனைய இலங்கைப் பிரசைகள் அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

இக்கூப்பனை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்:
எஸ்-லோன் வீடுகட்டுவோரின் சீட்டிழுப்பு,
467, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.

பெயர் ______

முகவரி ______

கட்டிடத்தலத்தின் அமைவிடம் ______

குழாய்த்தொழிலாளரின் பெயர் ______

வியாபாரியின் பெயர் ______

முகவரி ______

எஸ்-லோன் குழாய்கள் இணைக்கப்படுவதை நேரிற் சென்று பார்வையிடுவதற்கு மஹாராஜா ஆர்கனைசேஷனின் பிரதிநிதியொருவருக்கு இத்தால் அதிகாரம் அளிக்கப்படுகிறது.

தேதி ______ கையொப்பம் ______

இன்று பி.வி.சி. குழாய்களுள் முதற் தரமானது எஸ்-லோன் ஏன்? ______

S-lon நிகர் வேறில்லை

முடிவு திகதி 1984 அக்டோபர் 30

விலை ஒரு மீட்டர் 13/05 முதல்

உற்பத்தியாளர்கள்: த மஹாராஜா ஆர்கனைசேஷன் லிமிட்டெட்

விற்பனை அலுவலகங்கள்: 467, யூனியன் பிளேஸ், கொழும்பு-12.

விபரங்களை உங்கள் வியாபாரியிடம் பெறுங்கள்.

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00, 4-30
7-00
NIGHT SHIFT
(adults only)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ரஜனிகாந்த்
சௌகார்ஜானகி
தீ

ராணி (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30.
சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா
பட்டணமா

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30
ஸ்ரீநாத், ராஜீவ், ஜோதி
ரயில் பயணங்களில்
(ஈஸ்ட்மன் கலரி)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

சாந்தி (யாழ்நகர்)
1—3
10-30, 2-30, 4-45
மட்டும்
Sean Conery
THE MAN WITH THE DEADLY LENS
(ActionColor)

ரீகல் (யாழ் நகர்)
10-30, 2-30, மட்டும்
ரத்தத்தின் ரத்தமே
10-10-84 முதல்
VISITING HOURS
(strictly for adults)
இருதயம் பலவீனமானவர்கள் கண்டிப்பாக இதனைப் பார்ப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00 4-30
6-45
Every lovers should see this film!
Willie games.....
Phoebe crates
PARADISE
(Color) strictly for adults)
கண்டிப்பாக 17 வயதுக் குட்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30, 2-30
ஜெய்சங்கர் - லக்ஷ்மி
நவாப் நாற்காலி

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00,
சிவாஜி - ஜெயலலிதா
சவாலே சமாளி
(ஈஸ்மன்கலர்-புதிய பிரதி)

வின்ஸர் [யாழ்.]
தினசரி 10-30, 2-00, 4-30.
6-30
புரூஸ் லீ யின் வாழ்க்கையில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த
"BIG BOSS"
தொடக்கம் முதல் முடிவு வரை நாடி துடிக்கும் உள்ளத்தில் ஒரு கிளுகிளுப்பை ஊட்டும் விறுவிறுப்பான கராட்டி சண்டைகள் நிறைந்த காட்சிகள்.
(புத்தம் புதிய பிரதி)


## செய்திச் சிதறல்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

### புதிய நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்கு-மேற்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன் நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. மகாதேவன், உப-தலைவர்கள்: திரு. சி அருச்சுணன், திரு. பி. சொக்கலிங்கம், செயலாளர்: திரு, த. இராசரத்தினம், உப செயலாளர்: திரு. இ. கருணாகரலிங்கம், பொருளாளர்: திரு. சி. ஜெகதீஸ்வரன், போஷகர்கள்; உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ சி. செபநாயகம், மானிப்பாய் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

### நாகர்கோவில் நாகதம்பிரான் உற்சவங்கள்

[யாழ்ப்பாணம்]

நாகர் கோயில் நாகதம்பிரான் தேவஸ்தான வருடாந்த உற்சவம் நேற்று ஆரம்பமானது, 13-ம் திகதி சமுத்திர தீர்த்ததுடன் உற்சவம் நிறைவுபெறும் மேற்படி உற்சவங்கள் யாவும் மாலை 7 மணியுடன் நிறைவு பெறும் கப்பல் திருவிழா 10-ம் திகதி நடைபெறும் என ஆலயபரிபாலனசபை அறிவித்துள்ளது.

### பனம் பொருள் பயிற்சி

[மட்டக்களப்பு]

பனம் பொருள் அபிவிருத்தி சபையினால் மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குள் இரு பயிற்சி நிலையங்களைத் திறப்பதற்கான ஏற்பாடுகளை பிரதேச அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

இப் பயிற்சி நிலையங்கள் திசவீரசிங்கம் சதுக்கம், மருதடி வீதி ஆகிய இடங்களிலுள்ள மாநகர சபைக்குரிய கட்டடங்களில் அமைகின்றன.

### போஷாக்கு வாரம்

மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம் மாதம் 29 ம் திகதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ள அகில இலங்கை போஷாக்கு வாரம் தொடர்பான வைபவங்கள் 8 உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலும் 38 கிராமோதய உணவு போஷாக்கு குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன

இப் போசாக்கு வாரத்தை முன்னிட்டு இக் கிராமோதய பிரிவுகளில்கருத்தரங்கு,உணவு பதனிடும் செயல் முறைகள், சிரமதானங்கள் உட்பட பல்வேறு நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

### குமுழமுனையில் பதற்றநிலை

[யாழ்ப்பாணம்]

குமுழமுனையில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை காரணமாக, விவசாயச செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் வெளியில் செல்லாமல் பயத்தின் காரணமாக வீட்டிலேயே தங்கியுள்ளனர். (க)

### லியோ கழகம் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ் மத்திய கல்லூரிலியோ கழகம் யாழ்மாநகர சபையின் தீயணைப்புப்படை நிதிக்கு சுமார் 6,000 ரூபாவை சேகரித்து வழங்கியுள்ளது.

மேலும் இக் கழகப் சிறுநீரக கோளாறினால் பாதிப்புற்று வேலூர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் யாழ் மத்திய கல்லூரி மாணவன் தினேஸ் சோமசுந்தரத்திற்கு 1000 ரூபா சேகரித்து வழங்கியுள்ளதுடன் இக் கழக அங்கத்தவர்கள் யாழ் பொதுசன வைத்தியசாலைகள் இரத்ததானம் வழங்கியுள்ளனர்.

## மில் உரிமையாளர் சுகமடைகிறார்

(யாழ்ப்பாணம்)

வவனியாவில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான மில் உரிமையாளர் திரு. சபாநாதனை யாழ். ஆஸ்பத்திரியில் ஏராளமானோர் வந்து பார்வையிட்டனர்.

நேற்று முன்தினம் இவருக்கு அவசர சத்திரசிகிச்சை நடைபெற்றதைத் தொடர்ந்து, தற்போது சுகமடைந்துவருகிறார் சம்பவதினம் இரவு வாகனமொன்றில் சீருடையில் வந்தவர்கள், விசாரணை செய்வதற்கென அவரை அழைத்துச் சென்று விசாரணை செய்ததாகவும், பின்னர் கைகளைப் பின்புறத்தில் கட்டிவிட்டு கன்னத்தில் இருதடவை சுட்டதாகவும் கூறப்படுகிறது.

சுட்டபின்னர் அவர் நிலத்தில் விழுந்துவிட்டதாகவும், அவர்கள் சென்றபின், எழுந்து வவனியா ஆஸ்பத்திரிக்கு சென்றதாகவும் கூறப்படுகிறது. வவனியா ஆஸ்பத்திரியிலிருந்து அவர், யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (க)

## "சமயவளர்ச்சியில் கூடுதல் கவனம் வேண்டும்"

(வண்ணார்பண்ணை)

''விளையாட்டாசிரியரோ, விஞ்ஞான ஆசிரியரோ மாணவர்களுக்கு சமய பாடத்தைப் போதிக்க முடியாது. இந்த நிலையில் மாணவர்களது சமய அறிவு, சமய கலாசாரப் பாதிக்காமல் இருக்க இந்துக்கள் சமயவளர்ச்சியில் தமது கவனத்தை திசைதிருப்ப வேண்டும்.

இவ்வாறு யாழ்மாவட்ட வட்டாரக் கல்வியதிகாரி திரு. க. மகேசன் இந்து இளைஞர் பேரவைத் தொண்டர்களுக்கான சமயக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திருநெல்வேலியில் நடைபெற்ற இக்கருத்தரங்குக்கு தொண்டர்பிரிவுத்தலைவர் திரு லோ. ராமமூர்த்தி தலைமை தாங்கினர். யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை இக் கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

கல்வியதிகாரி திரு. மகேசன் தொடர்ந்து பேசுகையில், ''சமயக் கோட்பாடுகளும், தெய்வ நம்பிக்கையும், சமயப் பற்றும் நிறைந்த சமுதாயமொன்றை நாம் உருவாக்க முன்வரவேண்டும். இதற்குப் பாடசாலைகளும், சமய ஸ்தாபனங்களும் போதனைகளை முறைப்படி நடத்த முயல வேண்டும்'' என்று கூறினர்.

## நாட்டின் சில...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

விடமுடியும்'' என்று திருமதி பண்டாரநாயக்கா அங்கு மேலும் பேசுகையில் கூறினர்

''இலங்கை ஒருசிறுநாடாயிருந்தாலும் முழுஉலகமுமே மரியாதை செலுத்திவந்தது ஆனல் இன்று நாட்டின்தோற்றம் வெளிநாடுகளில் அசிங்கப் படுத்தப்பட்டுள்ளதற்கு இந்த அரசேகாரணம்.

முன்னைய ஸ்ரீ லங்காசுதந்திரக்கட்சி அரசு சேவையாற்றவில்லையெனக்கூறி எனது குடியுரிமைகளைப் பறித்தார்கள் ஆனல் இன்று வடக்கில் தோன்றியுள்ள பிரச்னைகளைத் தீர்க்கநான் உதவவில்லையென்கிறார்கள் என்று அவர்மேலும் கூறினர்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு அனுராபண்டாரநாயக்காவும் பேசினர்.

## இன்றைய பலன்

மாதம்—புரட்டாதி

திகதி—19(5-10-1984)
வாரம்—வெள்ளி

திதி—ஏகாதசி இரவு 10-21 வரை

நக்ஷத்திரம்— திருகோணம் காலை 8-14ன்மேல்அவிட்டம்

மேடம்:- இலாபகரமான தொழிலில் முதலீடுகள் செய்வீர்கள் வாகன சொந்தகாரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும் தாய்வழியால் தன வரவிற்குமிடமுண்டு.

இடபம்:- கனிவான சம்பவங்கள் இடம் பெறும் அபிப்பிராய பேதங்கள் மறைந்து பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர் குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத்தரும்.

மிதுனம்:- நம்பிக்கை மோசடி நடக்கும் வியாரத்துறையில் நஷ்டம் ஏற்படலாம் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும் உடல் நலக் குறைவிற்கும் இடமுண்டு.

கடகம்:- பிரம்மச்சாரிகள் வாழ்க்கையில் காமனின் கணை தாக்கும் காதல் உலகில் கனிவான சம்பவங்கள் நடைபெறும் களஸ்திர வழியாலும் சுகம் உண்டு.

சிங்கம்;- எதிர்பாரத முனையிலிருந்து ஆபத்து உருவாகும் இயந்திரங்களுடன் பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

கன்னி:- பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழுவீர்கள் பிதா வழிதனமும் சேரும் தானதருமங்களில் ஈடுபாடு ஏற்படும் பெரியோர்கள் ஆசி கூறுவார்கள்.

துலாம்:- தொழில் துறையில் நன் மாற்றங்கள்ஏற்படும் மேலதிகாரிகளின் ஆதரவு தாரளமாக கிடைக்கும் நண்பர்கள் மூலம் புதிய தொடர்புகள் ஏற்படும்.

விருச்சிகம்:- வருமானத்தில் அபிவிருத்தி நிலை காணப்படுகிறது கடந்த சில மாதங்களாக நிலவிவந்த தயக்க நிலையில் இன்று நல்ல திருப்பம் ஏற்படும்.

தனுசு:- எதிர்பாரத விளைவுகள் மூலம் செலவுகள் அதிகமாகும் சிலர் வாழ்க்கையில் கடன் பட நேரும் பிணிக்கு இடங்கொடாது இருக்கவும்.

மகரம்:- இடர்கள் பல தாக்கும் இதயத்தில் எரிமலை குமுறும் உதவி செய்யப் போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரும்.

கும்பம்:- பேச்சுவன்மையால் பிறருடைய நன்மதிப்பைப் பெறுவீர்கள் கல்வித் துறையில் திருப்திகரமான முன்னேற்றமுண்டு.

மீனம்:- எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படும் சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கலாம் சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு.

திருமலை

வே. ரவீந்திரன்

## துர்க்காவிற்கு வயது 6!

புதுடில்லி அக். 4

இந்தியாவின் முதலாவது பரிசோதனைக் குழாய்ச்சிறுமி நேற்றுத் தனது ஆறுவது பிறந்த தினத்தைக் கொண்டாடினர்!

துர்க்கா என்ற இச் சிறுமி ஆரோக்கியத்துடனிருக்கின்றாள். உலகில் முதலாவதாகப் பிறந்த பரிசோதனைக் குழாய்ப்பிள்ளையைவிட இரு மாதம் 7 நாள் துர்க்கா இளையவள் என்று தெரிவிக்கப்பட்டது.

1978ம் ஆண்டு முதலாவது இந்திய பரிசோதனைக் குழாய் ஆராய்ச்சிக் குழந்தையாக துர்க்கா பிறந்தாள்! (கி)

## இன்று

[யாழ்ப்பாணம்]

வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் ஆலய இலட்ச்சார்ச்சனையும், கேதார கௌரிவிரதமும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும்.

## சிரமதானம்

[சாவச்சேரி]

கைதடிமுகாம் அகதிகள் மறவன் புலவு வீடமைப்புத் திட்டத்தில் மறவன் புலவு மாதர்சங்க கூட்டுறவு ஊழியர்கள் ஒருநாள் சிரமதான பணியில் ஈடுபட்டனர். திருமதி இராசரத்தினம் தலைமையில் இருபத்தைந்துக்கு மேற்பட்ட பெண்கள் சிரமதானப் பணிகளை செய்வதுடன் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் இப் பணியில் ஈடுபடவுள்ளனர்.


## 31-ம் நாள் நினைவஞ்சலி

### திரு. அம்பலவாணர் இராசலிங்கம்



மலர்வு:

1922–02–19

உதிர்வு:

1984–09–05

பாரெல்லாம் போற்ற
பாசமொடு எமை வளர்த்து
பார்புகழ வாழ்ந்த
பண்பான தந்தையே
கொடுமனத்தார் சுட வீழ்ந்து
கொடுந்துயரில் ஆழ்த்தி விட்டாய்
எக்காலம் சென்றாலும் எம்மிதயக்காவில்
ஏற்றமொடு வீற்றிருப்பாய்.

மல்லாவி, யோகபுரம்.
மனைவி, மக்கள், மருமக்கள், பேரக்குழந்தைகள். 37

### நட்டத்தில் நடக்கும் ஸ்தாபனங்களை மூடிவிட்டு

# அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க உலக வங்கி யோசனை

(கொழும்பு)

நஷ்டத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும் கூட்டுத்தாபனங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பணத்தை அரசாங்க ஊழியர்களின் சம்பள உயர்வுக்குப் பயன்படுத்தும்படி அரசாங்கத்துக்கு உலக வங்கி ஆலோசனை கூறியிருப்பதாகத் தெரியவருகின்றது.

நஷ்டத்தில் இயங்கும் கூட்டுத்தாபனங்களை மூடிவிடும்படியும் அல்லது தனியாரிடம் ஒப்படைக்கும்படியும் உலக வங்கி ஆலோசனை கூறியிருப்பதாகவும், இந்த ஸ்தாபனங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பணத்தை ஊழியர்களின் சம்பள உயர்வுக்குப் பயன்படுத்திக்கொள்ளும்படியும் உலக வங்கி யோசனை கூறியிருக்கிறதாம்.

இதேசமயம் நஷ்டத்தில் நடத்தப்படும் 25—40 ஸ்தபனங்கள் பற்றியவிபரம் விரைவில் நடைபெறவிருக்கும் வரவு செலவுத்திட்ட உரையின்போது நிதிஅமைச்சர் பாராளுமன்றத்தில் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் அரச ஊழியர்களுக்கு விரைவில் சம்பள உயர்வு கிடைக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

## பழுதடைந்த கா.ர் சேதப்படுத்தப்பட்டது

[கரவெட்டி]

வீதியில் கைவிடப்பட்ட பழுதடைந்த 'சோம செற்' கார் ஒன்று வேறொரு வாகனத்தில் வந்தவர்களால் தாக்கப்பட்டுப் பலத்த சேதத்துக்குள்ளானது.

இச்சம்பவம் துன்னாலையில் இடம்பெற்றது. இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

மந்திகை சாவகச்சேரி வீதியிலுள்ள துன்னாலை தாமரைகுளம் என்ற இடத்தைச் சேர்ந்தபிரஸ்தாப கார் உரிமையாளர் தனது காரை 'ஸ்ராட்' செய்வதற்கு முயன்றாராம். இக்காரை இப்பகுதிச் சிறுவர்கள் தள்ளிக்கொண்டு வந்தனராம்.

இதேவேளை தொலைவில் சில வாகனங்கள் வருவது தெரியவே சிறுவர்கள் எல்லோரும் காரைக் கைவிட்டுவிட்டு மறைந்துவிட்டனராம்.

இதனையடுத்து இவ்விடத்துக்கு ஆயுதங்களால் தாக்கியும் தமதுவாகனத்தால்மோதியும் சேதப்படுத்தினராம்.

காரின் கண்ணாடிகள் முழுவதும் உடைக்கப்பட்டு முன் பகுதி மோதப்பட்டுச் சேதமாக்கப்பட்டுள்ளன.

## மரண அறிவித்தல்

### திருமதி சிவநேசம் பத்மநாதன்

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த திருமதி சிவநேசம் பத்மநாதன் அவர்கள் காலமானார். அன்னார் திரு. பத்மநாதன் (யாழ். கூட்டுறவு இலாகா தலைமைக்காரியாலய பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும், சிவானந்தன்(O. T. S, கொழும்பு),சிவானி அவர்களின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற மலாயன்பென்சனியர்திரு திருமதி சின்னத்துரைஅவர்களின் அன்பு மகளும், காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் திரு. சுந்தரம்பிள்ளை, திருமதி சுந்தரம்பிள்ளை அவர்களின் அன்புமருமகளும், விஜேந்திரத்தின்அன்புச் சகோதரியும், திருமதி சிவபாக்கியம் சந்திரசேகரம் (மலேசியா), திரு நாகராசா, திருமதி புஸ்பம் (மலேசியா), திருமதி சிவயோகம்- துரைசிங்கம் (மலேசியா) திருமதி மகேஸ்வரி ராசநாதன், திருமதி சிவநேஸ்வரி-தேவராசா, திருமதி பரமேஸ்வரி பாலசுப்பிரமணியம் திருமதி யோகேஸ்வரி கந்தசாமி (லண்டன்) அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார் ஈமக்கிரியைகள் 25, பொன்னப்பாலேன், வண்ணார்பண்ணை இல்லத்தில் 6-10-84 சனிக்கிழமை நடைபெற்று பூதவுடல் காலை 10 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

59

## ராணுவ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் பாதுகாப்பு நிலை பற்றி பாதுகாப்பு அமைச்சில் அமைச்சர்,அவர்களுக்கு விளக்கிக் கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது:-

காலி 'பூஸா'வில் வைக்கப்பட்டுள்ள 60 பேரில் 12 அல்லது 15 பேர் மட்டுமே பயங்கரவாத நடவடிக்கைளில் ஈடுபட்டார்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.

ரகசியத் தகவல்களை கொடுப்பதற்கு முன்வருபவர்கள் இப்போது பயப்படுகிறார்கள் தாம் கொலை செய்யப்படுவார்கள் என்ற அச்சம் அவர்களைத் தடுக்கிறது.

### கச்சதீவில் தவளைகள்

கச்சதீவு ராணுவத் தளமாகிறதென்று சர்வதேச செய்தி ஸ்தாபனங்கள் இப்போது கூறுகின்றன. ஆனால் கச்சதீவில் தவளைகளும், கடல் வாழ் உயிரினங்களுமே இருக்கின்றன. இதைத்தவிர அங்கு வேறுஎந்த விஷயங்களும் நடக்கவில்லை.

'வானொலி சாதனங்களை ஏன் திருடுகிறார்கள்?' என்று கேட்டதற்கு அமைச்சர் சொன்னார்:

ராணுவ முகாமைத் தாக்கும் நட்டத்துடன் இந்த சாதனங்கள் திருடப்பட்டு வருவதாக இரகசியத் தகவல்கள் கிடைத்துள்ளன. ராணுவ முகாம், அல்லது கேந்திர ஸ்தானமொன்றைத் தாக்கும் நோக்கத்துடன் இந்தக் கருவிகள் கொள்ளையடிக்கப்படுகின்றன. அத்தோடு தகவல் தொடர்பு சாதங்களைச் சேமித்து வருகின்றனர்.

வடக்கு அபிவிருத்தி நிறுத்தப்பட்டுள்ளது என்பது தவறாகும். நீர் விநியோகத்திட்ட வேலைகள் அலன் தம்பதிகள் கடத்தலினால் அதிருப்தியடைந்த அமெரிக்க நிறுவனம் அதனை நிறுத்திவிட்டது. அவ்வளவுதான்.

## ஜீப்பில்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பின்டக்கம் கட்டிவிட்டு இரு தடவை சுட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவர்கள் சென்றபின் வவனியா ஆஸ்பத்திரிக்கு சென்று அங்கிருந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவித்கார். (க)

## மரண அறிவித்தல்

### திருமதி அப்பையா செல்லம்மா

திருமதி அப்பையா செல்லம்மா அவர்கள் 4-10-84 சிவபதமடைந்து விட்டார். இவர் காலம் சென்ற முன்னள் "கிறின்லெய்ஸ் வங்கி" சிறுப்பர் திரு அப்பையா அவர்களின் அன்பு மனைவியும் (171, புதுச்செட்டித் தெரு கொழும்பு-13) தங்கராசா (Trust travels), சரோஜினிதேவி, கமலாதேவி, பத்மினிதேவி, பாக்கியநாதன், (சவூதியரேபியா] சிவசோதிலிங்கம் (Trust travels) சகுந்தலாதேவி ஆகியோரின் அருமைத் தயாரும்; பத்மாசனி, காராளசிங்கம் (நைஜீரியா), தியாகராஜா (நைஜீரியா), சிவசுப்பிரமணியம் [சீப்சைட்], சத்யபாமா, பற்றிமா, சிவராசா [நைஜீரியா] ஆகியோரின் மாமியாரும், அபிராமி, ரமணி, திருமதி சூரியகலா சிவக்குமார், சசிக்குமார், கமலினி, தியாகினி [யாழ் இந்து மகளிர்கல்லூரி] கோணேஸ்வரன், பிரபாகரன், மதனு, சோதிராஜ், தயாழினி, ஜனராஜ். அமுதினி இளங்கோ, உபேன், அமுதன் ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னரின் பூதவுடல் ஈமக்கிரியைக்காக இல: 528/2, K K S. வீதியிலிருந்து (சுட்டாதெரு சந்தி) கோம்பையன் மணல் மயானத்திற்கு 6-10-84 சனிக்கிழமை பி. ப 3 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்

60

இப் பத்திரிகை ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Eelanadu Telephone 22389 - 24126.

## இப்படியும் நடக்கிறது

மகாத்மா காந்தியின் 115-வது பிறந்த தினத்தை முன்னிட்டு, யாழ் பெரிய ஸ்பத்திரிக்கு முன்பாக உள்ள மகாத்மா காந்திஜி சிலை இரண்டாம் திகதி மலர் மாலைகளால் அலங்கரிக்கப்பட்டுக் காட்சியளித்தது.

காந்தியை நன்றியுடன் நினைத்து, அவரது சிலைக்கு மாலையும் அணிவித்து யாழ். நகரில் இப்படி 'விழா' எடுத்தவர்கள் யார்?

ஜப்பானிய பிக்கு ஒருவர் இவ்விதம் மாலை சூட்டியதுடன் மட்டுமின்றி, காந்தி சிலையின் கீழ்அமர்ந்திருந்து பிரார்த்தனையில் ஈடுபட்டதுடன், அங்கு கூடிநின்ற பொது மக்களுக்கு அறிவுரைகளும் வழங்கினர்!

– 'ஊடுருவி'

### வேலணை சம்பவம் —

## தீவிரவாத இயக்கம் தரும் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ப. நோ. கூ. சங்க சம்பவம் தொடர்பாக நேற்று 'ஈழநாடு' முதல் பக்கத்தில் வெளியான செய்தி குறித்து தீவிரவாத இயக்கம் ஒன்று பின்வருமாறு விளக்கம் தெரிவித்துள்ளது.

"கொள்ளையர்களால் கொள்ளை நடத்தப்பட்டது என்பது தவறு. எமது இயகக உறுப்பினர்கள் அடையாள அட்டையைக்காட்டியே தமது நடவடிக்கையை மேறகொண்டார்கள் ஆயினும் சம்பவம் திரிக்கப்பட்டு தமக்குச் சாதகமாக செய்தியை வெளியிடச் செய்துள்ளார்கள். உண்மை நிலையை மக்கள் உணர வேண்டும்"

### புங்குடுதீவில் நேற்று!

## குண்டு வீச்சில் ஜீப் தப்பியது!

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் வைத்து ஊர்காவற்றுறைபொலிஸ் ஜீப்புக்கு நேற்றுமாலை குண்டு வீசப்பட்டது. ஆனாலும் இந்தக் குண்டுவீச்சிலிருந்து எவ்வித பாதிப்பமில்லாமல் தப்பி விட்டது.

நெடுந்தீவில் பிரேத பரிசோதனைக்காக தமிழ்ப் பெண் வைத்திய அதிகாரியுடன் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய தமிழ்பொறுப்பதிகாரி சென்றுவிட்டு திரும்பி வரும்போதே இச் சம்பவம் நடந்தது.

உத்தியோகபூர்வமான கடமைக்காகச் சென்ற பெண் அதிகாரியைக் காப்பாற்றியதுடன், நவராத்திரி நிகழ்ச்சி ச்..ரசச் சப்பவ இடத்தில் நின்றுகொண்டிருந்தபொதுமக்களுக்கு எவ்வித ஆபததும் ஏற்படாததும் குறிப்பிடத்தக்கது.

## இன்று சிரமதானம்

[மானிப்பாய்]

ஏழாலை மகாவித்தியாலயத்தில் இன்று வித்தியாலய அதிபர் தலைமையில் மாணவ, மாணவிகளும், ஆசிரியர்களும் கூட்டாக சிரமதானப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

இச் சிரமதானத்தில் வித்தியாலயக்கட்டிடம் விளையாட்டு மைதானம் துப்புரவு செய்தல், வேலி அடைத்தல், பூந்தோட்டம் அமைத்தல் என்பனவும் இடம்பெறும்.

## மற்றுமொரு வாகனம் கடத்தல்!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நேற்றுக் காலை நடராசா என்பவரின் வாகனம் துப் ாக்கி முனையில் இரு இளைஞர்களால் கடத்திச்செல்லப்பட்டது. [க]

## நாளை..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

"வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்' நூல் வெளியீட்டு விழா நடக்கவுள்ளது தினகரன் பிரதம ஆசிரியரும், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத தலைவருமான திரு ஆர் சிவகுருநாதன் தலைமையிலும், யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு சி. வீ கே. சிவஞானம்முன்னிலையிலும் நடக்கும் இவ்விழாவில் திரு. என். சபாரத்தினம், ஓறேற்றர் சி.சுப்பிரமணியம், உட்படமற்றும் பல்துறையைச் சேர்ந்தவர்கள் உரையாற்றுவார்கள். கலை இலக்கிய பத்திரிகை நண்பர்கள் ஏற்பாட்டில் இவ்விழா நடக்கிறது.

## மரண அறிவித்தல்

### திரு. வை. சோமசுந்தரம்

திரு. வை. சோமசுந்தரம் (Retd. P. W. D. Overseer) காலமாகிவிட்டார். இவர் திரு. செல்வராசா (R. M. P. Govt. Hospital Diyatalawa), திருமதி சுந்தரேஸ்வரி அம்பிகைபாகன் ஆகியோரின் அருமைத் தந்தையாவார். இவரின் பூதவுடல் கந்தரோடை இல்லத்திலிருந்து 5.10 84 (வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு குடும்பமயானத்திற்குத் தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். நண்பர்களும், உறவினர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

61